# ஈழத்தாய் சபதம்



எஸ். கருணானந்தராஜா
(யுகசாரதி)

# ஈழத்தாய் சபதம்

எஸ். கருணானந்தராஜா
(யுகசாரதி)

CENTURY HOUSE
35 BRANDRETH COURT, HARROW MIDDLESEX
HA1 2JU, U.K.

**EELATHAI SABATHAM**
(Narrative & Collection of Poems)
By
**S. KARUNANANDARAJAH**
@ Author

# ஈழத்தாய் சபதம்

எஸ். கருணானந்தராஜா ©

முதற் பதிப்பு
நவம்பர் 2004

முன்அட்டை
மு.ஸ்ரீதரன்

அச்சாளர்
மணி ஆப்செட்
சென்னை 5.

பதிப்பாளர்

**CENTURY HOUSE**
35 BRANDRETH COURT,
HARROW MIDDLESEX
HA1 2JU, U.K.

பக்கம் : 112

**விலை :**

**ISBN 1-873265-42-5**

**சமர்ப்பணம்**

எங்கள் வீட்டிற்கு முதல்வனாய்
வந்து ஒளி ஏற்றி
என் கல்விக்கும் கவிதைக்கும்
ஊக்கமூட்டிய மூத்த அத்தான்
மறைந்த **திரு. சின்னப்பு சிவப்பிரகாசம்**
தபால் அதிபர், மண்டூர் அவர்களின்
காலடிகளுக்கு

# என்னுரை

'ஈழத்தாய் சபதம்' என்னும் இந்நூல் இயற்றப்பட்டு கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. சில காலம் கிடப்பில் போடப்பட்ட பின்னர் சென்ற ஆண்டு கனடா உதயன் பத்திரிகைக்கும் ஈழத்தில் கிழக்கிலிருந்து வெளிவந்து தற்போது நின்றுபோய்விட்ட 'தமிழலை' பத்திரிகைக்கும் அனுப்பினேன். கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் மனமுவந்து அதனைத் தொடர் கவிதையாகப் பிரத்தியேகக் கட்டத்தினுள் பெரியஎழுத்தில் வெளியிட்டார். அவருக்கு எனது மனமுவந்த நன்றிகள்.

எனது வேண்டாத காலம் நான்பிறந்த மண்ணான ஈழத்தின் கிழக்கில் இருந்து வந்த தமிழலை, அந்த மண்ணில் ஏற்பட்டுக் கொண்டிருந்த துரதிஷ்டவசமான நிலைமாற்றங்களாலோ என்னவோ? கவிதையை வேண்டாவெறுப்போடு வெளியிட்டது. எனது நன்றிகள் அங்கிருந்த பத்திரிகையாளர்களுக்கும் உரித்தாகுக. தற்போது லண்டனிலிருந்து வெளியாகும் 'ஒரு பேப்பர்' பத்திரிகையில் தொடராக இக்கவிதைகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அந்நிறுவனத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

கவிதையை நூலாக்கவிரும்பி அதை எனது பெருமதிப்புக் குரிய கவிஞர் காசி அண்ணனிடம் அனுப்பி ஓர் அணிந்துரை கேட் டேன். நறுக்குத் தெறித்தாற்போன்ற, அவருக்கேயுரிய பாணி யில் என் மனம்மகிழ அணிந்துரை கிடைத்தது. ஆன்ற தமிழ்ப் புலவன் அண்ணன் காசி என்னைத் தன் அணிந்துரையில் இலக்கியர் என விளித்துள்ளமை எனக்குப் பிடித்திருக்கிறது. கவிஞர் கூட்டத்தினுள் நான் காணாமல் போய்விடக்கூடாது என்ற அவரின் ஆதங்கம் அவ் வார்த்தையில் தெரிகிறது. அவரின் வாய்ச்சொல்லைப்போல இனிமேல் என்னை ஓர் கவிஞனாக அல்லாமல் மரபு பேணும் இலக்கியனாகவே இனம் காட்டிக்கொள்ள முடிவு செய்துவிட்டேன். அண்ணன் கவிஞர் காசி ஆனந்தனுக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலைப் பற்றிச் சில வார்த்தைகள். 'ஈழத்தாய் சபதம்' என்னும் இந்நூல் ஈழத்தமிழரின் இதிகாச, சரித்திர, சமகாலவரலாறு களை ஆங்காங்கே கவிதை வடிவில் தொட்டுச் செல்லுகின்றது. ஆனால் இதனை ஓர் சரித்திரம் என்று எழுதப்போய் இன்றைய வரலாற்று அறிஞர்களால் மூக்குடைபட நான் விரும்பவில்லை. பாரதி யின் பாஞ்சாலி சபதத்தின் சாயலில் ஓர் இலக்கிய வடிவை நாமும் செய்து பார்த்தாலென்ன என்ற ஆதங்கமே இந்நூல் உருவாகக் காரணம். முற்றானவோர் சரித்திரத்தைப் பதிவு செய்யும் நோக்கம் எனக்கில்லை.

எது எவ்வாறிருப்பினும் ஈழத்தாய் தனக்கெனவோர் சத்தி யத்தை, சபதத்தைச் செய்திருக்கிறாள் என்பது மறுக்க முடியாத ஓர் உண்மை. 'ஈழதேசமே ஈழத்தாய் சபதம்.' அந்தச் சபதம் உருவான பின்புலக்காரணங்களே இங்கே சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

புத்தகத்தின் பிரதான கவிதைகள் தவிர்ந்த எமது போராட்டம் சார்ந்த ஏனைய கவிதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. குறிப்பாக யாழ் நூலக எரிப்பு நினைவுக்கவிதையும் உள்ளது. அதையும் அத்துடன் வேறு சில கவிதைகளையும் எனது பெருமதிப்பிற்குரிய பேராசிரியர். கோபன் மகாதேவா ஐயா அவர்கள் ஆங்கில மொழியாக்கம் செய்து இருக்கிறார். Raising from the Ashes என்னும் யாழ்நூலகம் பற்றிய

நூலில் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்ட யாழ் நூலக எரிப்பு நினைவுக் கவிதை காணப்படுகின்றது. அவரால் மொழி மாற்றம் செய்யப்பட்ட எனது வேறு இரு கவிதைகளும் இதில் இடம்பெறு கின்றன. ஐயாவுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக் கிறேன்.

இந்நூலை விமர்சிக்க விரும்புவோர் எடுத்த எடுப்பில் என்னை யோர் சரித்திராசிரியனாக்கிக் களம்புகாமல் இந்த முன்னுரையையும் வாசித்தபின் தாக்க முற்படுக என அன்புடன் வேண்டுகிறேன்.

இந்நூலுக்கு நான் விரும்பியபடியே முன்அட்டை வடிவமைப்புச் செய்து உதவிய அன்புத் தம்பி மு. ஸ்ரீதரனுக்கும் என்னுடன் உதவி யாய் இருந்து S. அரவிந்தனுக்கும் என் அன்பு நன்றிகள்.

இலக்கியத்திலோ கவிதையிலோ பெரியளவில் ஈடுபாடு இல் லாளாயினும் என்னுடன் இனிய இல்லறம் இயற்றும் என் இல்லாள் திருமதி. தயாபரி கருணானந்தராஜா உணர்வுமிக்க கவிதைகளை நான் உருவாக்கக்கூடிய மனச்சோர்வற்ற சூழலை எனக்கு ஏற்படுத்தித் தருபவள். அந்த ஆத்ம சினேகிதிக்கும் என் அன்பு நன்றிகள்.

அன்புடன்

**எஸ். கருணானந்தராஜா**

(யுகசாரதி)

10-06-2004

1A Rookery Close
London NW9 6QJ
E Mail: karu@tinyonline.co.uk
Web site: www.kavithai.co.uk, www.tamilpoetry.com

## அணிந்துரை

**த**மிழிலக்கிய வரலாற்றில் தனித்தே நிற்கிறான் பாரதி.

அவன் ஒரு திருப்பம்.

பாரதிதாசன், தமிழர்தம் 'நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா' என்று பாரதியைப் போற்றுகிறார்.

இலக்கியர் கருணானந்தராஜாவைப்பற்றி அவர் படைத் துள்ள ஈழத்தாய் சபதம் நெடும்பாவில் இரண்டு செய்தி களைத் தெரிந்து கொள்கிறோம்.

தமிழீழ மண்ணை உயிராக நேசிப்பவர் பாரதியோடு முழுமையாக ஒன்றியவர்.

பாவின் பொருள் தமிழீழம் - பாவின் நடை பாரதி.

தமிழீழ மண்ணின் நெடிய வரலாற்றைக் கருணானந்த ராஜா தமிழ் கொண்டு பதிவு செய்கிறார்.

வரலாற்றைப் 'பா' ஆக்குவது எளிதானதல்ல. உணர்ச்சி பொங்க எழுதப்படாவிட்டால் அது இலக்கியமாக வராது - வடிவம் பெறாது.

கருணானந்த ராஜாவின் ஆற்றலில் தமிழீழ வரலாறு இலக்கியமாய்க் கனிந்திருக்கிறது.

படித்தேன்.

படிக்கத் தொடங்கியதில் இருந்து முடிக்கும்வரை தொடர்ந்து படிக்கவேண்டும் போல் தோன்றிற்று.

காலம்காலமாய்ப் போராடியே வாழ்ந்த ஒரு மண்ணின் வரலாற்றுக் காட்சிகள்....

**ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் சேர்த்து**
**அணிநடை செய்தவண்டா! - உயிர்**
**மாய்வதெம் மண்ணினுக்காய் என வாழும்**
**மறவர் தலைவனடா!**

என்றும்,

**எத்தனை கோடித் துயர்வந்த போதும்**
**இடிந்து விடாதவண்டா!, - தன்னை**
**மொய்த்த பகைதனை யென ஓர் பெரு**
**மூச்சில் கலைப்பவன்டா!**

என்றும்,

தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனை கருணானந்த ராஜா பாடும்போது தமிழ் சிலிர்க்கிறது.

தமிழுக்கு உயிரூட்டும் - தமிழினத்துக்கு உணர்வூட்டும் - தமிழீழ மண்ணுக்கு உரமூட்டும் தமிழ்.

இனமான உணர்வின் இலக்கியச் சிலிர்ப்பு.

வாழ்த்துகிறேன்...

கருணானந்தராஜாவின் தமிழ் தொடர்ந்து நெருப்பாய்க் கனிக.

அன்பின்

காசி ஆனந்தன்
20-4-2004.

# பொருளடக்கம்


கடவுள் வாழ்த்து 10
இலங்கை தேசம் 11
ஆரியர் கொடுமை : இராமாயண காலம் 12
ஆரியர் கொடுமை : மகா வம்ச காலம் 15
ஐரோப்பியர் ஆட்சி 18
நமது அரசியல் 29
சிங்களர் சூது 22
தந்தை செல்வா 23
தமிழாராய்ச்சி மாநாடு 28
வட்டுக்கோட்டைத் தீர்மானம் 30
ஆவரங்கால் மாநாடு 32
பிரபாகரன் எழுச்சி 34
தந்தை செல்வா மறைவும் அஞ்சலியும் 37
எண்பத்தி மூன்றினிலே... 40
அன்னை இந்திரா சாய்ந்தனள் 43
இந்தியாவின் மனமாற்றம் 45
இந்திய உணவுப் பொதி 46
போராளிகள் குமுறல் 47
இலங்கை இந்திய ஒப்பந்தம் 49
அண்ணல் எம்.ஜி.ஆர் மறைவு 50
இந்தியப் படை வருகை 51
பன்னிரண்டு புலித் தலைவர்களின் மறைவு 52
ஈழத்தாய் குமுறல் 54
திலீபனின் உண்ணாவிரதம் 57

59 அன்னை பூபதி
60 இரண்டாம் ஈழப்போர்
61 ஈழதேசம் : ஈழத்தாய் சபதம்
64 தமிழீழ மாதா பெருமை
66 போகின்ற ஈழமும் வருகின்ற ஈழமும்
68 சுதந்திரப் பெருமை
70 இந்தியத் தமிழ்நாடே...
72 முடி கவி
74 யாழ் நூலக எரிப்பு நினைவுக் கவிதை
79 சுதந்திரத் துள்ளு
81 மீண்டும் புதுவசந்தம்
83 ஒரு நத்தார் சபதம்
85 பொங்கடா தமிழா
87 விடியலை நோக்கி...
90 இசைப் பாடல்கள்
97 கலைஞர் கருணாநிதிக்கு
APPENDIX
ஆங்கிலமொழி மாற்றம் செய்யப்பட்ட கவிதைகள்
99 IN 1983
102 ON THE JAFFNA LIBRARY ARSON 1981
109 FREEDOM LEAP
111 ஆசிரியர் பற்றி...

## கடவுள் வாழ்த்து

கையினில் நெய்யதுவாய் - அடிக்
கரும்பினில் இனித்திடு சுவையதுவாய்
மெய்யினுள் உயிர்க்குயிராய் - என்றும்
விளங்கிடும் பிரமத்தின் அருட்குவையால்
ஐயமும் திரிபுமற்றே - எங்கள்
அன்னைமண் ஈழத்தாய் சரிதமதை
வையத்துக் குரைத்திடுவேன் - அந்த
வரகவி பாரதி வழி நடந்தே

□

# இலங்கை தேசம்

இந்துமா கடலுண்டாம் - அதில்
இலங்கையென்றொரு சிறு தீவதுவாம்
முந்தைய இராவணனின் - முழு
முதற்பொருள் சிவனவன் அடிதொழுத
சிந்தையில் உதித்த பல - உயர்
சிறப்புகள் அமைந்த நல் நகரதுவாம்
பிந்தைய காலத்திலே
பெரும்பான்மையச் சிங்களப் பித்துடைத்தாய்

அன்பிலங்காததுவாய் - திரு
வருளிலங்கா செல்வப் பொருளிலங்கா
துன்பங்கள் நிறைந்ததுவாய் - கொடுந்
துயர் பசி பட்டினி வறுமையுடன்
மன்பதை தவித்திடவே - கோல்
வளைந்திடவே போர் விளைந்திடவே
வம்பர்கள் அரசு செய்தார் - அதை
வார்த்தையில் எழுதவும் கூசிடுதே

ஐயிரு சிரத்தவனாம் - அந்த
ஆரிய ராமனைப் பகைத்தவனாம்
பையரவச் சடையான் - சிவன்
பதமலர்த் திருவடி பணிந்தவனின்
கையினிலிருக்கையிலே - தமிழ்
களிநடம் புரிந்தனள் இலங்கையிலே
பொய்யெனப் புனை கதையாய் - அந்தப்
புகழ் திரு யாவையும்போயினவே

□

# ஆரியர் கொடுமை - இராமாயண காலம்

**வேறு**

சூர்ப்ப நகை என்ற மங்கையாள் - மனம்
சொக்கும் சுடர் நிறக் கொங்கையாள்
போர்க் குணம் கொண்ட இராவணன் - தன்றன்
பொன்னெனப் போற்றிய தங்கையாள்
மூக்கிலடித்து விட்டன்னியர் - அவன்
முன்றலில் நின்றிடு போதிலே
ஆர்க்கும் இத்தீமை பொறுக்குமோ - அண்ணன்
அன்னியன் பெண்டிலைத் தூக்கினான்

காதல் படுத்திய பாட்டினால் - இளங்
கன்னி இராமனை நாடினாள்
தீதெது நன்றெது தேர்ந்திடா - அந்தச்
சின்னஞ் சிறுசு பின் வாடினாள்
பேதையை ஆரிய ராமனும் - தன்றன்
பின்னவன் மீது திருப்பவே - அந்தக்
காதகன் பெண்மையை நோக்கிடாது - அக்
கன்னியின் மூக்கினிற் தாக்கினான்

என்ன ரகசியம் என்று நாம் - இதை
இன்னும் அறிகிலம் நண்பரே
முன்னைய எம் குலப் பெண்டிர்கள் - இந்த
மூடத்தனமதைச் செய்வரோ
கன்னியின் கற்பினைக் காவுகொண்ட பின்
காதகன் செய்த துரோகமோ - இல்லை
மன்னன் இராவணன் தன்னையே - வீண்
வம்புக் கிழுத்த சதியிதோ

ஆரியர் என்றும் செருக்கராம் - தெற்கை
ஆண்ட எம் முன்னோர் அரக்கராம் - எனப்
பாரினில் அன்றொரு மாயையை - அந்தப்
பாசிச வாதிகள் கொண்டதால்
நாரியர் என்றும் மதித்திடார் - எம்மை
நாயிலும் கீழ்க் கடையாக்கினார் - தங்கள்
காரியம் யாவையும் மெச்சியே - எம்மேற்
காறியுமிழ்ந்தனர் எச்சியே

ஆளும் அரசன் கடவுளென்றந்த
ஆரியர் கொள்கை வகுத்ததால் - இந்தப்
பாழு முலகினில் பொய்நெறி - பண்டை
நாளில் பரவிய கீழ்மையால்
நாளும் பொழுதும் வணங்கிடும் - தெய்வ
நாயகராய் இந்தக் காதகர் - எங்கள்
வாழ்வில் புகுந்தனர் அன்றுகாண்
வரலாற்றில் படிந்த கறை இதாம்

ஆரிய ராமன் கடவுளாம் - எம்மை
ஆண்ட இராவணன் மூர்க்கனாம் - என
காரியவாதிகள் கூறியே - பெருங்
காவியம் பற்பல ஆக்கினர்
மாரீசனின் தண்ட காரண்யம் - அந்த
வாலியின் கிட்கிந்தை யாவையும் - இந்தப்
பாரினில் அன்று தமிழ் நிலம்-கொடும்
பாவிகளாற் பறிபோனதே

**வேறு**

இலங்கையத் தீவினிலே - அந்த
இராவணன் காலத்தின்போது - குறு
நிலங்களின் அதிபர்களாய் - எங்கும்
எங்கும் நிறைந்திருந்தார் பல தமிழ் மறவர்
கலங்கரை விளக்குகளும் - பெருங்
கப்பல்கள் தரித்திடும் துறைகளுமாய்த்
துலங்கின கடற்கரைகள் - அந்தத்
தொன்மையின் சிறப்புச் சொல் அகப்படுமோ

ஈழத்து உணவினை நாம் - கப்பல்
ஏற்றியதும் பலர் போற்றியதும்
ஆழத்துக் கடல் குளித்தே - முத்தை
அள்ளியதும் விற்றுத் தள்ளியதும்
வேழத்தின் தந்தங்களைப் - பல
வெளியுலகத்தினர் வியந்து வந்தே
பாளத்துத் தங்கங்களாய்த் - தந்து
பண்டங்கள் மாற்றிய பழங்கதையும்

இயம்பிடும் போதினிலே - என்றும்
இன் சுவையூறிடும் நாவினிலே
நயம்படக் கவிதையிலே - தர
நல்லவர்க்கும் வரும் மமதையிலே
வாழ்ந்திருந்தோம் ஒருகால் - அந்த
வளங்களெல்லாம் இன்றொழிந்தனவே
சூழ்ந்தது கருமேகம் - எம்மைச்
சுற்றியதே பெருங் கருநாகம்

□

## ஆரியர் கொடுமை - மகா வம்ச காலம்

விசயனென்றொரு முரடன் - தான்
விரும்பியபடி அவன் நாட்டினிலே
தசையினில் ஆசைகொண்டே - இளந்
தளிர்களைக் கசக்கிப் பின் தரையெறிந்தான்
வசை வருமெனப் பயந்தே - அந்த
வம்பனை அவனது தோழருடன்
திசையறியாக் கடலில் - என்றும்
திரும்பி வராவண்ணம் மரக்கலத்தில்

தந்தை அரசனவன் - உயர்
தர்மத்தைக் காத்திட அனுப்பிவைத்தார்
விந்தையில் விந்தையடா - எங்கள்
வினைப்பயனோ இல்லை விதியதுவோ
முந்தையர் கொடுமைகளோ - அந்த
மூர்க்கனைச் சுழற்புயல் கொணர்ந்தெமது
செந்தமிழ் ஈழத்திலே - கரை
சேர்த்ததடா மறை வேர்த்ததடா

மண்டலத்தரசியவள் - உயர்
மறத்தினள் ராவணன் வழியில் வந்தாள்
வண்டமிழ்ப் பொற் 'குவை நீ' - எனும்
வாயினி லினிக்கிற பெயருடையாள்
புண்டரிகத் தெழிலாள் - அந்தப்
புலையனைப் புணர்ந்திட ஆசை கொண்டாள்
பண்டைய பெருமையெல்லாம் - அந்தப்
பாவியினால் எமக் கழிந்ததுவே

ஆயிரமாயிரமாய் - இளம்
அனிச்சைகள் தனை முகர்ந் தெறிந்தவனை
நாயினை அவள் புணர்ந்தாள் - நாம்
நாடிழந்தே நடுத்தெருவில் நின்றோம்
தேயத்து வன்னியர் நாம் - தலை
திருப்பிய புறமெங்கும் அன்னியர்கள்
பேயெனச் சிரித்து நின்றார் - எங்கள்
பெருமையெல்லாம் அன்று எரித்து நின்றார்

துட்டனைப் புணர்ந்ததனால் - அவள்
துயரினை அதன் பின்னர் சுமந்ததுவும்
கெட்டவன் எமதரசைத் - தன்றன்
கீழ்க் கொண்டு வந்திட முயன்றதுவும்
பட்டத்து அரசியென - ஒரு
பாண்டிய மங்கையை மணந்ததுவும்
பொட்டெனத் தமிழ் நிலங்கள் - அந்தப்
புலையனின் கை வசமானதுவும்

நாட்டினை இழந்ததனால் - வெறும்
நடைப்பிணமாகிய தமிழரினம்
காட்டினி லுறைந்ததுவும் - தீவின்
கரைகளில் ஒதுங்கியே வாழ்ந்ததுவும்
வேட்டுவரானதுவும் - சிலர்
வெஞ்சினமுற்றுக் 'குவை நீ' தனை
ஈட்டியில் முடித்ததுவும் - எங்கள்
ஈழத்தை இந்தியத் தமிழர்களாம்

பாண்டிய மன்னர்களும் - பலம்
பொருந்திய புலிக் கொடிச் சோழர்களும்
ஆண்டதும் விதிவலியால் - தமிழ்
அன்னையைத் தவிக்கவிட்டவர் நிலமே
மீண்டதும் பழைய கதை - பின்னர்
மேற்குலகத்தினர் எமைப்பிடித்தே
வேண்டிய பொருள் பறித்தார் - சுவை
மேவிய தமிழுக்கும் குழி பறித்தார்

பழங் கதையாயிடினும் - பெரும்
பாடங்கள் புகட்டியே வஞ்சனையை
விளங்கிட வைப்பதனால் - அதை
மீட்டிடல் தவறெனச் சாற்றுகிலேன்
உழன்றிடும் தமிழரினம் - இன்று
உலகினில் ஓர் அரசில்லாதே
முழங்கிடும் பழம் பெருமை - எங்கள்
மூட முன்னோர்களின் கதை மறைத்தே
□

## ஐரோப்பியர் ஆட்சி

வெள்ளையர் ஆள்கையிலே - பெரு
வீதிகளும் ரயில் பாதைகளும்
பள்ளிகள் பலப்பலவும் - எங்கும்
பரந்தன இலங்கையத் தீவினிலே
உள்ளதைச் சொல்லிடுவேன் - எந்த
உரிமையும் அற்ற அப்போழ் தினிலும்
கள்ளமில்லா அவரால் - நாம்
கவலைகள் குறைந்துயர் வடைந்திருந்தோம்

பாறைகள் உடைத்தெறிந்தார் - பெரும்
பரப்பனிற் தேயிலைச் செடி வளர்த்தார்
ஆறுகள் தனை அடைத்தே - உயர்
அணைகளை அமைத்து மின் சக்தி தந்தார்
நாறிடுஞ் சாக்கடைகள் - பெரும்
நகரங்கள் தனை என்றும் நரகஞ் செய்யா
வாறவர் வழி சமைத்தார் - பல
வகையிலும் தொழில் வளம் பெருகச் செய்தார்

ஏறென நடையுடையார் - அவர்
எழிலுடையார் உயர் நெறியுடையார்
மாறிடும் சொல் பகரார் - மேற்கு
மாந்தர்கள் வந்தெமை ஆண்டதனால்
பேறுகள் பல அடைந்தோம் - அவர்
பெருமையை மறுத்தொரு வஞ்சகமாய்
கூறிடத் தகுந்தவையாய் - அவர்
குறைகளைக் குறித்திடல் நீதியதோ?

□

# நமது அரசியல்

நாய்க்கேன் போர்த்தேங்காய் - அட
நமக்கேன் ஆள்கிற அரசுரிமை?
பேய்க்கோர் ஆலயமோ - இல்லைப்
பெரு மந்திப் படைக்கொரு மலர் வனமோ?
போக்கிரிக் குணம் படைத்தோர் - பலர்
புலமையினால் பண வலிமையினால்
நோக்கினிற் கயமையொடு - வந்து
நுழைந்தனர் அரசியற் களத்தினிலே

சிங்களத் தலைவருடன் - தமிழ்
தெரிந்தவரும் அதை மறந்தவரும்
இங்கிலீஸ் காரர்களும் - கலந்(து)
இனிய பல் விருந்துகள் சுவைத்ததல்லால்
தங்களின் மூச்சனைய - தமிழ்த்
தாயகந்தனை மனக் கருத்திலெடார்
இங்ஙனம் ஒரு யுகந்தான் - அவர்
இருந்தனர் காண்-மக்கள் வருந்தினர் காண்

அண்டைய பாரதத்தில் - தம(து)
ஆரிய உணர்வுடன் பல திறத்தார்
கண்டிடக் குடியுரிமை - பெருங்
கடினமதாகவே உழைத்து நின்றார்
சண்டைகள் சிலர் புரிந்தார் - பலர்
சாந்தியை விரும்பிய காந்தியுடன்
தொண்டினில் ஆர்வம் வைத்தார் - தங்கள்
சுதந்திரம் கிடைத்திடத் தலை நிமிர்ந்தார்

இலங்கையில் இருந்தவரோ - எந்த
எளிமையும் வலிமையும் உணர்வுமிலார்
பலங்கொடு தலைமையிலோர் - மக்கட்
படையுமிலார் உயர் நடையுமிலார்
கலங்கிடு நெஞ்சுடையார் - வெள்ளைக்
காரனின் அடிதொழ அஞ்சுகிலார்
சலங்கழி பயமுடையார் - தமிழ்ச்
சாதியின் உரிமையில் நயமடையார்

பாரதம் தனை விடுத்தே - வெள்ளைப்
பரங்கியர் அகன்றிடும் போதினிலே
யாரிதைக் கணக்கெடுப்பார் - என
நமதிலங் கையினையும் விட்டகன்றார்
போரேதும் புரியாதே - பல
போக்கிரித் தலைவர்கள் பதவிகளில்
ஆர் எது தகைமையெனும் - எந்த
அளவைகளும் இன்றி அமர்ந்து விட்டார்

கோல் முறை வழுவாதே - இங்கு
குடிகளை நலமுடன் வாழவைக்க
கோல்புறூக், டொனமூர் எனும் - உயர்
கோமகன்கள் வந்து கொள்கை தந்தார்
சோல்பரி எனும் பிரபு - நாம்
சுதந்திரம் பெற்றிடும் போதினிலே
நூல் பல கற்று வந்தும் - தமிழ்
நுடங்கிட ஒரு துயர் வழி சமைத்தார்

சுதந்திரம் எனச்சொல்லி - அந்தச்
சோல்பரி வெகு ஜன வாக்களிப்பை
விதந்துரை செய்ததனால் - என்றும்
மேவிய திரு நிறை பொலிவுடையாள்
அருந்தமிழ் ஈழமதை - எம(து)
அயலவர் சிங்களப் பெரும்பான்மைக்
கரந்தனில் ஒப்புவித்தார் - அந்தக்
கணமதில் சகலதும் போயினவே

□

## சிங்களர் சூது

### வேறு

எண்ணிலுயர்ந்த இனத்தினால் - தமிழ்
மண்ணைப் பறிக்கும் மனத்தினால்
கண்ணியவானெனத் தோன்றினார் - பலர்
கர்மத்திலே கருத் தூன்றினார்
உண்ணும் உணவும் தமிழரின் - பேர்
உழைப்பினில் வந்த துணர்ந்திடாது
பண்ணிடும் பாவம் அறிந்துமே - தமிழ்ப்
பஞ்சையர் மீது பொரிந்துமே

மத்திய மாமலைக் குன்றுகள் - தனில்
மார்பினை முட்டிப் பொடிசெய்தே
சத்தையிழந்திட்ட போதினும் - வளஞ்
சார உழைத்த தமிழர்தம்
சொத்தெனப் போற்றிய வாக்கினை - அவர்
சொந்தமிலாதது ஆக்கினார்
வித்து விழுந்தது ஆங்ஙனே - இன
வேற்றுமை நாற்றுக்கள் ஓங்கவே

வாக்குப் பறித்த கையோடுடன் - அந்த
வஞ்சகர் கொஞ்சமும் நின்றிடா(து)
நாக்கில் இன விசம் கக்கினார் - எம்மை
நாடற்ற பேர்களாய் ஆக்கினார்
சாக்குப் பல சொல்லி எங்களின் - பல
தலைவர்களும் ஒத்து ஊதினார்
நாய்க்குக் கிடைத்த தெலும்புதான் - சிலர்
நக்கப் பதவியில் தக்கினார்

□

## தந்தை செல்வா

வாக்குரிமை தனைப் போக்கிய - அந்த
வஞ்சகரோடு அரசியல் தொலை
நோக்கிலுயர்ந்த தலைவனாம் - தமிழ்த்
தோன்றலவன் செல்வநாயகன்
போக்கணங் கெட்ட குரங்குடன் - அந்தத்
தூக்கணப்புள்ளு நியாயங்கள் கொண்டு
வாக்கு வாதப் படப் போனவாறு - பல்
வாதங்கள் செய்ய முயன்றனன்

வேலி பயிரினை மேய்வதோ - பொய்மை
வேடம் இனியெமை ஆள்வதோ - வெறும்
போலிகளின் முக மூடியை - இந்தப்
போழ்தில் கிழித்தெறிவோமென்றே
சோலிகளின்றி இந் நாட்டிலே - எங்கள்
சொந்தத் தமிழீழ வீட்டையே - பரி
பாலித்து வாழுவம் என்றுமே - ஒரு
பாகப் பிரிவினை கோரியே

ஈழமொன்றே எம் புகலிடம் - அது
என்றும் தமிழரின் வாழிடம் - அதை
ஆளும் உரிமை எமததே - தமிழ்
அரசமைப்போம் எனக் கூறினான்
வாழும் உரிமையைப் பெற்றிட - அந்த
வள்ளல் தலைமையில் ஓர் படை - பண்டை
நாளின் தமிழரசொன்றினை - நிலை
நாட்ட அறவழி போனதே

□

ஒற்றை அரசினியில்லையாம் - அது
உண்மையிலே பெருந் தொல்லையாம்
பெற்றிட வேண்டும் நாட்டெல்லையாம் - இப்
பிணிக்கதுவே பெரும் வில்லையாம்
கற்றவர் யாவரும் சேருவீர் - எமைக்
காக்க உரிமைகள் கோருவீர் - உயர்
வுற்ற சமஷ்டி முறையதே - இவ்
வுலகில் எமக்குப் பொருந்துமாம்

தீவின் வடக்கும் கிழக்கதும் - எங்கள்
தேசமென்றார்த்து முழங்கினான் - துயர்
மேவின் மலையக மக்களும் - வந்து
மேன்மையுறட்டு மென்றெண்ணினான்
ஆவின் அமுதத்தைப் பன்றிகள் - என்றும்
ஆசையினோடு பருகுமோ - கொடுஞ்
சாவின் விளிம்பிற் தருமமே - நின்று
தத்தளிப்புற்றது அன்று காண்

கையிலாகாத அரசியல் - செய்து
காடையர் ஆள்கிற மன்றிலே - உயர்
மெய்யை உரைத்திடக் கூடுமோ - மறை
வேதத்தைப் பேய்கள் விரும்புமோ
நையப் புடைத்துதைத் தெங்களை - இந்த
நாட்டினை விட்டுத் துரத்தவே - அவர்
பையப்பைய வகை தேடினார் - அதைப்
பார்த்துத் தமிழர்கள் வாடினார்

சிங்களம் மட்டுமே சட்டமாம் - எங்கள்
செந்தமிழ் என்றுமே மட்டமாம்
எங்கும் சிங்கக் கொடி யேற்றுவோம் - ஓர்
ஈர்பத்தினாலு மணிக்குளே
வங்கக் கடலினில் தள்ளுவோம் - இந்த
வந்து இங்கேறு குடிகளை - என்று
பொங்கிப் புரைத்த புண் மீதிலே - அது
பொந்திட வேலினை ஏற்றினார்

வீதி பெருக்கும் வினைஞர்கள் - முதல்
மேற்தர வைத்தியர் மார்வரை - சம
நீதியில்லாத நிலைமையால் - தம்
நிரந்தர வேலை இழந்தனர்
போதனை செய்து அச் சிங்களம் தனைப்
புன்மை தவிர்த்திட ஆளிலை - பலர்
வேதனைப் பட்டு உழன்றனர் - சிலர்
வேறு பல் நாடுகள் சென்றனர்

போலிச் சினேகிதம் நம்பியே - மோசம்
போனதனால் உளம் வெம்பியே - அந்தக்
காலிமுகத் திடல் தன்னிலே - தமிழ்க்
கண்ணியவான் பலர் குந்தினர்
தாலிக்கு மஞ்சளைக் கட்டிய சொந்தத்
தாயின் கழுத்தையே வெட்டிய - பஞ்ச
சீலக் குலத்தினர் அல்லவோ - அவர்
சீறிச் சினந்தெமை நோக்கினார்

ஆந்தைக்கு ஆப்பிளை ஊட்டல் போல் - கடல்
ஆமைக்குத் தேன் சுவை காட்டல் போல் - சுனை
நீந்தும் முதலைக்கு நாவலின் கனி
நீட்டிப் பின் மாட்டிய மந்திபோல்
காந்திய மாநெறி தன்னிலே - கொடுங்
காடையரின் படை முன்னிலே
சாந்தி வழியெனச் சொல்லியே
சத்தியாக் கிரகம் செய்து காட்டவே

ஆண்டவர் இஃதினை நோக்கினார் - பெரும்
ஆத்திரத் தோடெமைக் காலிகள் - கொண்டு
வேண்டிய மட்டும் புடைக்கவே - பலர்
வேறு வழியின்றி ஓடினார் - உடன்
மூண்டது போர் ஐம்பத்தேழிலே - தீவு
முற்றிலுமே அந்த நாளிலே
பாண்டவருக்குச் சுயோதனன் - செய்த
பாதகம் ஈதற் கீடாகுமோ

பாணந்துறையிற் குருக்களை - பெரும்
பாதைக்கு ஊற்றிடும் தாரினுள் - கலி
நாணிக் குனிந்திடுமாறிலே - ஓ
நாய்கள் புதைத்துச் சிதைத்ததும்
காணக் கண் கூசிடுமாறு எம் - தமிழ்க்
கன்னியர் ஆடைகள் நீக்கியே
வீணர்கள் வீதியில் விட்டதும் - நெஞ்சை
விட்டு அகன்றிடக் கூடுமோ

இந்த நிலைமை தொடர்ந்திட - தமிழ்
ஈழத்தவர் உளம் நொந்திட
வெந்தழல் மீதினில் நெய்யினைச் - சுடர்
மேலும் பெருகிட ஊற்றல் போல்
எந்த்வுலகிலும் ஏற்றிடா - பேர்
இழிவு தரும் கொடுஞ் செய்கையைச்
சிந்தையில் நாணஞ் சிறிதுமற்று - அச்
சிங்களர் செய்தல் தொடங்கினார்

கண்ணினிலும் பெரிதாகவே - நாம்
காத்து வளர்த்திட்ட கல்வியில்
மண்ணினை வாரியிறைத்தனர் - அந்த
மாமலராளும் முறைத்தனள்
பண்ணிய பாவங்கள் யாவிலும் - எம்
படிப்பைக் கெடுத்தது போலவே
மண்ணிற் கொடுமையதில்லையாம் - அதை
மன்னிக்க வேதமுமில்லையாம்

சிங்கள மாணவர் புள்ளிகள் - மிகச்
சிறிதெனிலும் பல்கலைக் கழ
கங்களிலேயவர் குந்தவும் - நாங்கள்
காட்டிடினும் திறன் பிந்தவும்
தங்கள் விருப்பப் படியெலாம் - வீண்
தரப்படுத்தல் முறை செய்ததும்
பொங்கியெழுந்தனர் வாலிபர் - பெரும்
போரிடவே வழி கோலினர்
□

## தமிழாராய்ச்சி மாநாடு

**வேறு**

கொடுமைகள் ஆயிரத்தைக் கோன் முறையாகச் செய்யா
கெடுமதியாளர் செய்யக் கீழ் நிலையுற்றோம் நாங்கள்
வடுவினில் வடுவாய் அந்தோ வகைதொகையின்றிச்செய்த
படுபாதகங்களாலே பைந்தமிழ் நிலை குலைந்தாள்

அன்னையெம் ஆரணங்கின் அழகினை ஆயவேண்டி
உன்னிய அறிஞர் கூடி உலக மாநாடு ஒன்றைத்
தன்னிலை இழிந்து போன தாமிர பரணித் தீவின்
சென்னியாம் யாழ்ப்பாணத்தில் சிறப்புடன் கூட்டவென்றே
எண்ணினார் ஆனால் அந்தோ இழிநிலை அரசுசெய்தோர்
கண்ணியம் குன்றி வீணே காழ்ப்புடன்
அதனைப் பார்த்தார்

சிங்களம் அரச பாசை செந்தமிழ் அடிமைப் பாசை
எங்களை விஞ்சி இங்கே இழிதமிழ் உயர்வதோ கொல்
மங்களம் தமிழுக்கோ இம் மானிலம் தன்னில்? இல்லை
செங்களக் குருதியாடிச் சீரழித் திடுவோமென்றே

ஆயுதப் படையை ஏவி அன்னை எம் தமிழ் மாநாட்டில்
போயுதைத்திட்டார் ஒடிப் புடைத்திடத்
தொடைகளெல்லாம்
வாய்பதைத் துயிர்த்தார் மக்கள் வாழ்விதோ
அவலம் என்றார்
நாயினுங் கடையாய்ச் சொந்த நாட்டிலே தமிழரானோம்

காப்பதாய்க் கடமையேற்ற காவலராலே வீணே
காழ்ப்புடன் தாக்குப்பட்ட கடைநிலை எய்தினோம் நாம்
ஆப்பினையிழுத்த மந்தி அதன் விதை தனை நசுக்கித்
தோப்பினுள் துடித்தவாறாய் தொன்மைசேர் தமிழை ஆய
மூப்பர்கள் அறிஞர் கற்றோர் முயன்று பின்
வருந்த அந்தோ
போர்ப்பகை மேகம் தீவைப் போர்த்தது ஈழம் சோர்ந்தாள்

ஆழி சூழ் உலகில் முன்னே அவதரித்திட்ட தீவில்
பூழி சேர் மண்ணில் கல்லில் புல் நுனி தோன்று முன்னே
மேழியைப் புதைத்து வாழ்வை விதைத்தவன்
தமிழன் அன்னான்
கோழிகள் மழையிற்றோய்ந்து கொடுகியே
ஒதுங்கு மாறாய்
வாழிடம் அற்றான் அந்தோ வறுமையும் துயருமுற்றான்
□

# வட்டுக்கோட்டைத் தீர்மானம்

செந்தமிழீழத் தந்தை
செல்வநாயகனின் முன்னே
குந்தினர் தலைவரெல்லாம்
கொள்கைகள் வகுக்க வென்றே

எந்தவாறாயினும் எம்
ஈழ நாடதனை எங்கள்
சொந்த நாடாக்கி அஃதில்
சுதந்திரம் பெறுவோமென்றே

ஆக்கியோர் தீர்மானத்தை
அவனியில் விடுத்து அஃதே
நோய்க்கினி மருந்தாம் என்றார்
நொடியினில் அன்னார்
பின்னே
தூக்கினார் கொடியை மக்கள்
துயரொழிந்திடற்காய்த் - தங்கள்
வாக்கினைத் தருவதல்லால்
வழிவகை எதையும் காணார்

இத்தகு நிலையில்
மக்கள் இருக்கையில்
எம் பி மார்கள் வித்தகப் பேச்சினாலும்
மேவிய செல்வத்தாலும்
சொத்தெனப் பறித்தார் வாக்கைச்
சுகந்தரு நாடாள் மன்றில்
பித்துற அமர்ந்தார் அன்றிப்
பிறிதொரு வழியும் காணார்

செருக்குடன் கொழும்பில்நின்று
செப்பலும் தமிழர் வீரம்
செருப்படி கிடைக்க
ஓடித் தப்பலும் என்றிவ்வாறாய்
உருப்படியாகச் செய்ய
ஒன்றுமே இலராய்த் தங்கள்
வரும்படி தன்னைக் கூட்ட
வழிவகை தேடி நின்றார்

தளர் உடற் தலைவன்
தந்தை தமிழ் மகன் செல்வா மட்டும்
உளமதில் உற்றதுன்ப
உணர்வினிற் தவித்தான் - ஆனால்
களமதில் வில்லங்கஞ் சேர்
காரியமான ஈழத் தளமதை
அமைக்கவேண்டித் தளர்விலும்
உழைக் கலுற்றான்
□

# ஆவரங்கால் மாநாடு

ஆவரங்காலிற் கூட்டு அணியினர் தமிழீழத்தை
நாவரங்கத்திற் கட்டி நவின்றிடக் கவிஞரெல்லாம்
பாவரங்கத்தில் நின்றார் பாடினார் விடுதலைக்காய்
யாவரும் வாயாலன்றி நடைமுறையெதையும் நோக்கார்

ஆகிய நிலையால் எங்கள் அன்னைமண் ஈழமாது
வேகியே துடித்தாள் வீணே விடுதலைத் தீயில் வெந்தாள்
சோகமே உருவாய் ஆனாள் சுதந்திரக் காற்றினாலே
தாகமே தீராளாகித் தவித்தனள் அமைதியற்றாள்

வேறு

காற்றிற் பறக்கும் உறுதிகள் - வெறுங்
கையினிலிட்ட முழங்களால்-வர
லாற்றைத் திருப்பிடக் கூடுமோ - நாய்
வாலை நிமிர்த்திடலாகுமோ
ஏற்ற உபாயங்களின்றியே - தமிழ்
ஈழத்தைக் காணுவமென்றுமே - பறை
சாற்றினர் பற்பலர் அன்றுகாண் - வெறுஞ்
சாகசப் பேச்சுடன் நின்றதால்

நாற்றமெடுத்த(து) அரசியல் - சொறி
நாயினுங் கீழ்க் கடையாகினோம் - பிணி
மாற்றும் மருத்துவர் நாமடா - எங்கள்
மண்ணினை மீட்டிடுவோமடா - என்ற
ஆற்றொழுக்கான கவிதைகள் - உள்ளத்(து)
ஆவேசங் கொண்ட உரைகளால் - நிஜத்
தோற்றமில்லா வொரு மாயையாய் - அன்று
தோன்றியதாம் தமிழ் ஈழமே

காற்றைக் குடித்தொரு தாகமே - எந்தக்
காலத்திலும் நிறைவெய்துமோ - தேன்
சாற்றைப் பிழிபவன் யாரடா - என்றன்
தாகத்தைத் தீர்ப்பவன் யாரடா
ஆற்றலுடையவன் ஓடிவா - என்றன்
ஆபத்தை நீக்கிடப் பாடிவா - எனச்
சாற்றினள் ஈழநன் மங்கையாள் - நல்ல
சங்கதி கேட்டதந் நாளிலே
□

# பிரபாகரன் எழுச்சி

## வேறு

வீரம் விளைந்ததடா
தமிழ் ஈழமண் மீதினிலே - வரி
வேங்கை எழுந்ததடா
வல் வெட்டித் துறையினிலே

ஆரத்தில் ஆல விடத்தினைக் கட்டிய
ஆண்மைக் குமரனடா - பெரும்
ஆபத்தையே பனியாக மதித்திடும்
ஆதித்ய சோதியடா
சீலத்தில் வாய்மையில் போர்ப்படை கட்டிய
சிந்தனையாளனடா - எங்கள்
செந்தமிழன் பிரபாகரன் என்கின்ற
செல்வக் குமரனடா

இந்தியச் சூதினை எட்டியுதைத்திட்ட
எங்கள் தலைவனடா - தமிழ்
விந்தியந் தொட்டுக் குமரி வரையெனும்
விதியை மறுத்தவன் டா
செந்தமிழ் ஈழ மணித்திரு நாட்டைச்
செதுக்கிய சிற்பியடா - ரத்தம்
சிந்திச் சிந்தித் தமிழ் மானத்தைக் காத்திடச்
சீறிடும் வேங்கையடா.

குட்டக் குனிந்த தமிழன் நிமிர்ந்து
குதறிட வைத்தவன் டா - அட
எட்டுத்திசையிலும் ஈடிணையற்ற-எம்
ஈழத்தலைமகன் டா
துட்டகெமுனு தொடக்கிவைத்திட்ட
துயரை ஒழித்தவன் டா - நாம்
பட்டது போதுமென்றார்த்து எதிரியில்
பாய்ந்த புலியவன் டா

ஆயிரமாயிரம் வேங்கைகள் சேர்த்து
அணிநடை செய்தவன் டா - உயிர்
மாய்வதெம் மண்ணினுக்காய் என வாழும்
மறவர் தலைவனடா
பேய்களுலாவிடு காடதுவாக்கிய
பேரின வாதிகளின்-தலை
சாய எம் மண்ணினில் வீர பராக்ரம
சாகசம் செய்பவன் டா

எத்தனை கோடி துயர் வந்தபோதும்
இடிந்து விடாதவன் டா - தன்னை
மொய்த்த பகைதனை ஈயெனவோர் பெரு
மூச்சிற் கலைப்பவன் டா
இத்தரை மீதிற் கரந்தடி வித்தையில்
ஈடிணையற்றவன் டா - எங்கள்
சொத்தெனத் தாயக ஈழமண் தன்னிற்
சுதந்திரம் கேட்பவன் டா

சேய்கள் பல்லாயிரம் சேர்ந்தனர் - சூழ் பெருந்
தீமையழியுமடா - அவர்
வாய்மையில் வீர வழிமுறையில்-தமிழ்
மாண்பு சிறந்ததடா
ஆயுதங்கையில் அறவழி நெஞ்சிலென்(று)
ஆர்க்கும் புலிகளினால் - துயர்
போயின போயின என்று தமிழ் மகள்
துள்ளி நிமிர்வாளடா

## வேறு

இதன் பிறகு நடந்ததெல்லாம் கவியிற் சொல்ல
என் புலமை போதாது அறிவீர் ஈழச்
சுதந்திரமே நினைவானார் மக்களெல்லாம்
துணிவுற்றார் பலம்பெற்றார் நிமிரலானார்
விதந்துரைகள் பல சொல்லித்
துணைக்கண்டத்தார்
வீறு மிகு போர் முனைப்பை மழுங்கடிக்க
நிதம் முயன்றார்
தம் நலனைக் கருத்திற் கொண்டார்
நிமிர்ந்த தமிழன் கூனான் என்றும் கண்டார்
□

# தந்தை செல்வா மறைவும் அஞ்சலியும்

## வேறு

எண்பத்தி நாலு வரை வாழ்வேன் எங்கள்
இனிய தமிழ் ஈழமதைக் காண்பேன் என்றே
புண்பட்டுநொந்திட்ட தமிழர் நெஞ்சம்
புத்துயிர் பெற்றெழுந்திடவே சொன்ன தந்தை
கண்பட்டு வீழ்ந்திட்டான் தமிழர் வேறு
கதியற்றார் துயருற்றார் கலங்கி நின்றார்
எண்பட்ட யாவரையும் கவருமிந்த
இழிகாலன் செய்கையது என்னே! என்னே!

செல்வா என்றோர் வார்த்தை
சொன்னால் அங்கோர்
சேனையது தலைதாழ்த்திப் பணிந்து நிற்கும்
செல்வா என்றே சொனனாற் தமிழ மங்கை
செழு முலையினூடோடி வீரம் சிந்தும்
செல்வா என்றழைத்திட்டாற் தமிழர் வாழும்
தேசமெலாம் அச்சொல்லின் சிறப்பு தேங்கும்
எல்லாமும் போனதடா ஈழம் சோர்ந்தாள்
இழிகாலன் செய்கையது என்னே என்னே

**வேறு**

தந்தை செல்வாவைத்
தானைத் தலைவனாய் ஏற்கா தோரும்
சிந்தையில் துயரடைந்தார் சிங்களர் கூடச் சோர்ந்தார்
மந்திரச் சொல்லால் ஈழ மக்களைத் தன்பால் ஈர்த்து
விந்தைகள் புரிந்த செம்மல் விழிகளை
மூடிக் கொண்டான்

ஓடியே ஒடுங்கிற்றம்மா உயிரினைத் தமிழுக்காக
வாடியே கொடுத்த அன்னான்
வண்டமிழ்த் தென்றல் மூச்சு
பாடியே என்ன கண்டோம் பாடையில் வீழ்ந்த அந்த
நீடிய தமிழ் மரத்தின் நிழலினிக் கிடைக்கப் போமோ?

**வேறு**

கண்ணார் தமிழின் உயர்வுக் குழைத்தே
காற்றால் உதிர்ந்த சருகானாய்
எண்ணார் உன்னை ஏற்காதோரும்
ஏற்றும் தெய்வம் நீயானாய்
விண்ணேகினையோ செல்வா தமிழின்
விழியே உயிரே ஆரீரோ
அண்ணா தூங்கு ஆறத் தூங்கு
ஆரீர் ஆரீர் ஆரீரோ

துன்பஞ் செய்த உடல் நோயோடும்
தூய தமிழிற் குழைத்ததிலே
இன்பங் கண்டாய் செல்வா என்றும்
ஈழத் துயர்வே பேச்சானாய்
என்புந் தோலும் கொண்டாய் எனினும்
எங்கள் தமிழே மூச்சானாய்
அன்பே போதும் ஆறத் தூங்கு
ஆரீர் ஆரீர் ஆரீரோ

கைகால் நடுங்கும் உந்தன் உருவைக்
கண்டார் இரங்கும் படி வாழ்ந்தாய்
மெய்யாய் உணர்விற் தமிழே நினைவாய்
மெலிந்தாய் வாடி மிக நொந்தாய்
பொய்யாகிய இவ்வுலகின் பதவிப்
போரைச் சகியாதுயிர் சோர்ந்தாய்
ஐயா தூங்கு ஆறத் தூங்கு
ஆரீர் ஆரீர் ஆரீரோ

சீரார் தமிழின் சிறப்பிற்காகச்
சிறை சென்றனையே செல்வா நின்
பாரா முகம் ஏன் இழிமைத் தமிழர்
பதவிப் பித்தால் நொந்தாயோ
சோரா மனதிற் துயரச் சுமையாற்
தோள் சோர்ந்தனையோ செல்வா எம்
ஆராவமுதே போதும் தூங்கு
ஆரீர் ஆரீர் ஆரீரோ

□

# எண்பத்தி மூன்றினிலே

**வேறு**

எண்பத்தி மூன்றினிலே - ஆ
இலங்கைத் தீவினிலே

எண்பத்தி மூன்றினிலே
இந்து மா கடலுக்கு நடுவினிலே - ஆடி
இருபத்து நான்கிற் தொடங்கியதே துயர்
இலங்கைத் தீவினிலே

கண்பட்டதோ இத் தமிழினத்திற்கென
கண்டவர் யாரும் வருந்திட எங்களைப்
புண்படச் செய்தனரே-ஒரு
போக்கிடமற்ற அகதிகளாக்கியே
எண்பட்ட யாவரையும் தமிழ்
என்றறிந்தால் உடன் கொன்றெறிந்தார் - அந்தோ
(எண்பத்தி...)

நெஞ்சங் குமுறிடவே-கற்பு
நீங்கிடச் செய்த கொடுமையிலே - அந்தப்
பஞ்சைத் தமிழ் மகளிர்-கொடும்
பாவிகளாற் தங்கள் ஆவியை விட்டிட
அஞ்சிய பாலகர்கள்-தங்கள்
அன்னையர் மார்பில் அமுதமருந்தியே
துஞ்சிய செய்திகளும்-பல
துயரக் கதைகளும் மறந்திடுமோ-அந்த
(எண்பத்தி...)

தேயிலைத் தோட்டத்திலே - அந்தத்
தெற்கு இலங்கையிலே
ஆயிரமாயிரமாய்த் தமிழ்ச் சோதரர்
அன்று இனவெறியாற் கொலையுண்டதும்
நாயிலும் கீழ்க்கடையாய் - எம்மை
நாடற்ற பேர்களாய் ஆக்கிய பின்னரும்
காயும் இனவெறியால் - எம்மேல்
காறியுமிழ்ந்ததும் நெஞ்சை விட்டேகுமோ
(எண்பத்தி...)

வெலிக்கடைச் சிறையில் - மனம்
வெம்பிக் கிடந்த எம் சோதரர் தன்னையே...
சிலிர்க்குதேயுடலம்...அந்தோ!
சிந்தனை செய்திடவும் மனம் கூசுதே...
பலிக்கு வெட்டினரே...
பத்மாசனப் புத்தன் முன் கண்களைக் குத்தியே
படையலிட்டனரே-அந்தப்
பாதகம் எங்களின் நெஞ்சை விட்டேகுமோ
(எண்பத்தி...)

ஆண்ட அரச படை - எங்கள்
அன்னையர் தங்கையர் மானம் பறித்ததும்
மூண்ட பெருந்தீயில் - செல்வம்
முற்றும் இழந்து நாம் ஏதிலரானதும்
மாண்டவர் கண்களையே - அந்த
மானமிலாதவர் தோண்டி மகிழ்ந்ததும்
மீண்டும் நினைவலையில் - வந்து
மேவிட வெந்துயர் ஆவியைத் தீய்க்குது
(எண்பத்தி...)

சிங்கள பௌத்தவெறி - எங்கள்
செந்தமிழ்த் தாயைச் சிதைத்த கொடுமையை
எங்கு முறையிடுவோம் - எமக்(கு)
ஈழத்தையன்றியே யாதும் புகலுண்டோ!
தங்கையர் தம்பிகளே! - தமிழ்
ஈழ சரித்திரம் நாளும் படித்து நீர்
பொங்குக பொங்குகவே - ஒரு
போக்கிடமற்ற அகதிகளாயினோம்
(எண்பத்தி...)

மேற்குலகந்தனிலே - பொருள்
மேவிய வாழ்வொடு வாழினும் எங்களின்
நாட்டை மறப்போமோ! - எந்த
நாளினிப் போயதைக் காண்பதென்றே - அன்னை
வீட்டை மறப்போமோ! - என்று
விம்மியழுது புலம்பிடும் எம்குரல்
கேட்டிருப்பாய் காற்றே - அந்த
கேவலைக் கீழ்த்திசை சென்றெமதீழத்தில்
மீட்டு முரையாயோ - நாங்கள்
விம்மியழவும் திறன் கெட்டுப் போயினோம்
(எண்பத்தி...)

ஆற்றல் இழந்தவராய் - எங்கள்
அன்னை மொழியை மறந்தவராய்ப் - பெருங்
காற்றிற் கலந்தவராய் - கலாச்
சாரம் கலைகள் அழிந்தவராய் - நாம்
மாற்றினமாகுவதோ - இல்லை
மண்ணினை மீட்டு நாம் சென்றங்கு வாழ்வதோ
சாற்றிடுவாய் தாயே - ஹே!
சாமுண்டி காளீ! வீரகராளீ! (எண்பத்தி...)

□

# அன்னை இந்திரா சாய்ந்தனள்

இமயம் சரிந்தது இந்திரா சாய்ந்தனள்
உமையவள் வீழ்ந்தனள் உண்மை சரிந்தது

அலையெறியுங்கடல் அசைய மறந்தது
குலமகளிர் நுதற் குங்குமம் தீய்ந்தது
மலைமகள் வீழ்ந்த மலைப்பினில் இந்த
உலகச் சுழற்சியும் ஓர் கணம் நின்றது

காலன் அழுதனன் காதகர் செய்கையைக்
காணவொட்டாது முகம் சுழித்திட்டனன்
வேலையில்லாதவரால் எனக்குப் பழி
வீண் பழி வீண்பழி என்றுயிர்த்திட்டனன்

நர்த்தனஞ் செய்த தென் நாடுடையோன் நடம்
அர்த்தமிலாச் செயல் கண்டுடன் நின்றது
இத்தரை ஓர் கணம் ஏங்கிக் குலுங்கிட
மெய்த்தவத்தோர் தம் தியானங் குழம்பினர்

பெண்மையர் செய்த பழியது நான்மறை
உண்மை உரைக்கும் ஒளியை மறைத்தது
அண்மைய ஆத்மநுபூதித் தெளிவதன்
ஆற்றல் இழந்து பொய்த் தோற்றம் மெய்யானது

குயிலினம் இன் குரற் கூவல் மறந்தூர்க்
கோழிகளோடு தம் கேவலைக் காட்டின
மயிலினம் தோகை மடக்கி ஒடுங்கின
மாமத வேழங்கள் மயங்கித் தள்ளாடின

மன்பதை செய்த மடச்செயலாற் பசு
மாட்டினம் அம்மா ஆ! என்றரற்றின
வன் செயல்தன்னையுணர்ந்தன கன்றுகள்
வாளி மறந்து தம் பாழியடங்கின

அன்னையை ஏன் இவ் அரக்கர்கள் கொன்றனர்
என்ன கொடுமையிஃது என்று உணர்ந்தோ
சின்னஞ் சிறு பூஞ் சிட்டுக்களும் மலர்த்
தேனைக் குருதியென்றே வெறுத்தேகின

வார்த்தைகள் ஆயிரம் நெஞ்சிற் கனக்குது
ஆர்த்தெழுந்தே மனம் ஆடத்துடிக்குது
போர்த்திறன் காட்டி இப் பூமி பிளந்திடப்
போவெனப் போவென உள்ளம் இடிக்குது

ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் ஓம்
ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் ஓம்
ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் ஓம்
ஓம் சிவ ஓம் சிவ ஓம் சிவ ஓம் ஓம்
□

# இந்தியாவின் மனமாற்றம்

அம்மை இறந்து விட்டாள் எம்மை
ஆதரித்தாள் மறைந்தாள்
செம்மை அரசு செய்த அந்தத் தேவி இறந்து விட்டாள்
பொம்மைப் பிரதமரை - இந்தப் போழ்தில் உருவாக்கி
நன்மையைத் தாம்பெறவே அங்கு நரிகள் திட்டமிட்டார்

வம்ச வழி முறையில் அன்னை மகனை முன்னிறுத்தி
கம்சர்கள் ஆட்சிசெய்தார் மகன் கைகளைக் கட்டிவிட்டார்
இம்சையைச் சிங்களர்கள்
தொடர்ந் தீழத்தின்மேற் புரிந்தார்
எம் சக நண்பர்களோ எமை ஏய்க்க வழிபார்த்தார்

மக்களின் ஆதரவால் பெரு மன்னனென்றாகாமல்
துக்கிரிக் கூட்டத்தினர் அன்று தூக்கிச் சிம்மாசனத்தில்
வைக்கவும் வாயிழந்தே நின்ற வம்சப் பிரதமரும்
ஐக்கியம் பேசவந்தார் ஈழத்தன்னை திகைத்து நின்றாள்

செந்தமிழீழமது இந்தச் செகத்திலே மலர்ந்தால்
தென் தமிழ் நாட்டினிலே அது தீயினைப் பற்றவைக்கும்
இந்திய 'றோ' அமைப்பார் இலங்கைக் கள்வரிடம்
பந்தமடித்து விட்டே சென்று பகர்ந்த வார்த்தையிதாம்

ஊழலும் லஞ்சமுமே அந்த உலுத்தர் ரூபமதாய்
ஈழமகள் முதுகில் கத்தி ஏற்றிடத் திட்டமிட
ஆழமறிந்து கொண்டோம் வந்த
ஆபத்தினையுணர்ந்தோம்
தோழமை கொண்டவர் போல்
அவர் சொல்வதைக் கேட்டிருந்தோம்
□

# இந்திய உணவுப்பொதி

முடவராய் எம்மை ஆக்க முயன்ற
சிங்களத்தார் யாழில்
வடமராட்சிப் போர் தன்னை
வழிவமைத்திடவே - எங்கள்
திடமனப் புலிகளெல்லாம்
திமு திமு வென்று கூடி
உடனெதிர்த் திட்டார் ஆனால்
ஊரெலாம் அகதியாக
இடமெது நுழைய என்றே இருந்த
பாரதத்தார் வானில்
திடுமென நுழைந்து
மக்கள் தின்றிடச் சோற்றுப் பார்சல்
உடை, குடை, கூடாரங்கள்
உதிர்த்தனர் பூவாய் - மக்கள்
வடவரின் அன்பையெண்ணி
மனநெகிழ்ந் தழுது சோர்ந்தார்
□

## போராளிகள் குமுறல்

### வேறு

பாலப் பருவச் சிறுவர்கள் நாம்
பாதந் தடுக்கி வீழ்கின்றோம்
காலைப் பற்றித் தூக்கியெமைக்
கட்டியணைக்க முயல்கின்றாய்
கோலைத் தருவாய் நடை பழகிக்
கும்மிருட்டில் வழிகாண
ஞாலந்தனிலே என நம்பப் பாலைத்
தருதல் ஏனம்மா?

உலகம் அறியாச் சிறுவர்கள் நாம்
உனது தாய்மை தனை நம்பி
விலகாதிருந்தோம் உன் நிழலை
வேறாய் எம்மை மதிக்கின்றாய்
அலகாற் கொத்தும் பருந்துகளை
அழிக்கும் அம்பைத் தாராமல்
திலகம் ஆகிப் புவி திகழ்வோய்
விலகி முலையை ஊட்டுவதோ?

பொம்மைக் குதிரை, வில், வேல், வாள்,
போர் செய்
யானை எனப் பலதை
எம்மைக் காண வருவோர்க்கு
எடுத்துக் காட்டி நாம் மகிழ
அம்மா நீயோ நகைப்பிடையே
அவதானித்துச் சிரித்ததெல்லாம்
இம்மாதுயரில் எமக்கமுதம் இட்டுப்
பெருமை பெற்றிடவோ?

உமையே உன்றனிடப்பாகத்துயர்
குன்றனைய முலையாலே
குமையும் எங்கள் துயர்
போக்கக் கூடும் என்றே
எண்ணினையோ
அமைவாய் நெற்றி மையத்தே
அனலைச் சிதறும் மின்னார் கண்
இமையைத் திறவா தெந்நாளும்
எங்கள் துயரச் சுமைபோமோ?

இதயம் உலகுக் கானாய் நீ
என்றே இருந்தோம் எமதில்லின்
உதயம் கண்டே நீயுன்றன்
உளத்தில் மகிழ்வாய் என்றிருந்தோம்
விதையாய் வீழ்ந்தோம் எம் மண்ணில்
விருந்தாய் அமுதம் தருகின்றாய்
இதையா நாங்கள் எதிர்பார்த்தோம்
இனிமேல் நீ ஏன் எமக்கம்மா?
□

# இலங்கை இந்திய ஒப்பந்தம்

## வேறு

விரித்த தலை முடியா வேதனையாள் ஈழத்தாய்
சிரித்துப் பல காலம் சிந்தித்து நூறாண்டு
கண்ணிழிந்து நெஞ்சிற் கருத்தழிந்து மேற்கொண்டு
என்ன செய்வதென்று எதுவு மறியாதாள்
உள்ளத் தனல் பெருக உட்கார்ந்திருக்கையிலே

தாலியென்ற பேரில் தமிழை அழித்திட்ட
காலியைக் காடையனைக் கலியாணஞ்
செய்து வைக்க
மாமி முயன்றா மருமகனின் காணியெல்லை
காத்துத் தருகின்ற கடமையையும் தானேற்றா

பொற்கிள்ளை கழுத்தில் பூனை கட்டுமாம் தாலி
மணப்பெண் மைனரென்று மாமியார் முன் வந்து
கலியாணப் பதிவில் கையெழுத்திட்டா.
கலாட்டா கசாது காடையர் ஊர்க்கோலம்

முன்னின்று நடத்திய மாமனாருக்கு
முதுகிலேயொரு குத்தும் விழுந்தது

பத்தினித் தாயின் பண்பை மதியாது
பாரதம் பார்த்த மாமியார் வேலை
நித்தமும் எமது நினைவில் நிற்கும்
எத்தர்கள் எமக்கு எவரெனச் சொல்லும்
□

## அண்ணல் எம்.ஜி.ஆர். மறைவு

ஈழத்தவர் மனம் நொந்திட எம் ஜி ஆர்
ஏந்தல் உயிர் துறந்தான் - நாம்
வாழக் கரந் தருவேன் எனக்கூறிய
வள்ளல் மறைந்து விட்டான்
ஆழக் கிடந்த தமிழினம் மேலெழ
ஆர்வத்துடனுழைத்தே - வாழ்
நாள் முழுதும் மக்கள் சேவையிற் போக்கிய
நம்பி இன்றோய்வெடுத்தான்

தன்னைச் சரண்புகுந் தார்தனைக்காத்த நற்
தங்கக் குணமுடையோன் - எங்கள்
அன்னையாம் ஈழநன் மாதின் விடுதலைக்(கு)
ஆக்கத் துணை புரிந்தோன்
மன்னன் தமிழகத்தின் திரு இன்றுதன்
வாய் தனை மூடிவிட்டான் - அட
என்ன செய்வோமினி என்று கலங்கின
ஈழத்து நெஞ்சங்களே

காக்கும் கரந்தடிப் போர்ப்படை கட்டிடக்
கல்வைத்த சிற்பியவன் - நீங்கள்
ஆர்க்கும் அடிமைகள் அல்லவென்றேயெம (து)
ஆற்றல் உணர்த்தியவன்
மூர்க்கம் கொண்டே வெம் பகைதனில் மோதிட
மூச்சினை ஊதியவன் - தன்
நோக்கம் நிறைவுறும் முன் மறைந்தான் - தமிழ்
நொந்து துடித்தனளே
□

# இந்தியப் படை வருகை

**வேறு**

துட்டக்குரங்கினைச் சிட்டுக்குருவிக்குக்
கட்டிவைத்தே பெரும் சாதனையை
எட்டிவிட்டோமுயர் நோபல் பரிசெமக்(கு)
ஏற்புடைத்தாமென எண்ணினரால்
வெட்டிப் பிடுங்கிய வீறாப்பில் எங்களை
வீழ்த்திடலாமென்ற நோக்குடனே
துட்டப் படைகளை ஏவினர் ஈழம்
துயரடைந்தாள் எனில் சோர்வடையாள்

பாரதச் சூதர்கள் வானரசேனை
படுத்திய பாடுகள் ஒன்றிரண்டோ
நேரெதிர் கொண்ட வியாக்கிர சேனை
நிகழ்த்திய சாதனை ஒன்றிரண்டோ
ஆதரவற்ற தமிழினம் மீது
அமைதிப் படையெனும் போர்வையிலே
காதகர் செய்த பழிகளை மீட்பதில்
காண்பதென்ன அதை விட்டிடுவோம்
□

# பன்னிரண்டு
# புலித்தலைவர்களின் மறைவு

**வேறு**

ஆயுதந் தனைக்கொடுத்தே - அந்த
அமைதியைக் கெடுத்திடும் படைகளிடம்
சேய்கள் தம் பணி முடித்தார் - சிலர்
திருமணம் புரிந்து தம் வாழ்வமைத்தார்
ஆயினும் இழி மனத்தோர் - அந்த
அருந்தவப் புதல்வரைப் பழி முடிக்க
ஆயிரம் சதி புரிந்தார் - அதில்
ஆறிரு வேங்கைகள் உயிர் கொடுத்தார்

வங்கத்துக் கடற் பரப்பில் - அந்த
வரிப்புலிக் குருளைகள்வருகையிலே
சிங்களக் கடற்படையைத் - தம்
சினேகிதரென நினைந்தருகில் வர
இங்கிதம் சிறிதுமிலார் - அந்த
இழி குணத்தோர் தங்கள் பழி முடிக்க
தங்கங்கள் தனைப் பிடித்தார் - தாய்
தமிழவள் கலங்கிட விலங்குமிட்டார்

காடையர் தலைவனவன் - எங்கள்
கண்மணிகள் தனைக் கடத்தித் தன்றன்
நாடதன் தலை நகரில் வதை
நடத்திடு நான்காம் மாடியெனும்
கூடத்தில் கொடுமை செய்ய மனம்
குறித்து விட்டான் இதைக் குறிப்பறிந்தே
தேடினுங் கிடைக்காத - எங்கள்
தேயத்துப் பன்னிரு வன்னியரும்

மாய்வதில் உறுதிகொண்டார் - நச்சு
மருந்தினை அருந்தித்தம் உயிர் துறந்தார்
சேய்களை இழந்து நின்றாள் - அன்னை
திரும்பவும் தலைமுடி அவிழ்த்து நின்றாள்
நாய்தனை நிச்சயித்துத் - தன்றன்
நலன் நிறைவாழ்வுக்குத் தீங்கு செய்த
பேயெனப் பாரதத்தை - அந்தப்
பேதை தன் மனதினில் நினைந்தழுதாள்
□

## ஈழத்தாய் குமுறல்

**வேறு**

பாதகியே துர்க்குணத்துப்
பார் அதம் செய் நச்சு முலைப்
பூதகியே நீ திரும்பிப்போ - நிலை
ஏதுமற்று வாடுமெமை
ஏய்த்து விட வந்திருக்கும்
காதகியே நீ திரும்பிப் போ

ஆதரவற்றே யுலகில்
அன்னையென்று உன்னையெண்ண
தீது செய்தாய் நீ திரும்பிப்போ - உயர்
நீதி செய்வாயென்றிருக்க
நீசரோடு கட்டிவைக்கச்
சூது செய்தாய் நீ திரும்பிப்போ

**வேறு**

உள்ளங் குமுறுதடா - மக்காள்
உடன் செயல் படுவீர்
கள்ளனைக் கட்டு என்றே - என்னைக்
கண்டித்துச் சொல்லுகிறார்
துள்ளித் திரிந்தெனது - மக்காள்
சுதந்திர வாழ்வை
அள்ளி அனுபவிக்க - இவர்
அனுமதியாராம்

கால் கட்டுப் போடுகிறார் - என்றன்
கன்னியழிப் பேனோ
ஆர் கெட்டுப் போனாலும் - நான்
அசைந்திடுவேனோ
சீர் கெட்டு வாழ்விழந்த - அந்தச்
சிறுக்கி மூத்தவள் போல்
பேர் கெட்டுப் போவேனோ - என்
பெற்றி மறப்பேனோ

அப்பன் எனக்களித்த - என்றன்
அரிய சொத்துக்களை
குப்பையில் போடுவனோ - பெருங்
குழியில் வீழ்வேனோ
துப்பிட ஊர் உலகம் - தன்றன்
தூய்மையைத் தானிழந்தே - அவள்
வைப்பாட்டியானது போல்
என்றன் வாழ்வை இழப்பேனோ

துடித்து வாழுகிறார் - என்றன்
சுவாலைக் கண்மணிகள்
நடித்து வாழுகிறார் - அந்த
நர்த்தகியின் புதல்வர்
இடித்து எம்மரபை - அவர்
இங்கிலீஸ் பேசுகிறார்
படித்தும் என் புதல்வர் - தங்கள்
பாசை மறக்கவில்லை

மண்ணை இழந்து விட்டால் - சுய
மாண்பெனக் குண்டாமோ
கண்ணைக் கெடுத்து விட்டே - நான்
காட்சி வரைவதுவோ
பெண்ணைக் கொடுத்து விட்டால் - தம்
பிரச்சினை தீர்ந்ததென்றே
எண்ணினரோ மக்காள் - நாம்
இளித்த வாயர்களோ

என்று துடித்ததடா - நம்
ஈழத்து அன்னையின் வாய்
கன்றெனத் துள்ளி வந்தான் - அந்தக்
கன்னித் தமிழ்ப் புதல்வன்
கொன்றிடும் போர் முனைப்பே - அன்னை
கொள்கையென்றே நினைந்தோர்
அன்று உணர்ந்தனராம் - அவள்
அகிம்சைத்தத்துவத்தை

□

# திலீபனின் உண்ணா விரதம்

**வேறு**

தீயிலுடலை எரிக்கவா - கொடுந்
தேளளைக் கொட்டச் சிரிக்கவா
காயும் வயிற்றில் மரிக்கவா - என்றன்
கண்களைக் குத்திக் கெடுக்கவா
தாயுன்றன் வேதனை தீர்க்கவே - எதும்
தாங்குவன் நானெனக் கூறியே
பாயும் புலி எம் திலீபனும் - பெரும்
பட்டினிப் போரைத் தொடங்கவே

இந்தியச் சோதரர் இ..தினை
எதிர்பார்த்திருக்காத நிலைமையால் - தங்கள்
முந்தைய வாக்குறுதி தனை - விட்டு
மோசங்கள் செய்யத் தொடங்கினர்
சிந்தி இரத்தத்தினால் செய்த - எங்கள்
தேச விடுதலைப் போரினைத் - தங்கள்
சொந்த நலன்களைப் பேணவே
சொதப்பிடலாமென எண்ணினர்

நாட்கள் கடந்தனவாயினும் - எங்கள்
நன்மைகளுக் கொரு காப்பிலை
ஆட்களைக் கொண்டு வந்தெம் நிலம் - தனில்
ஆயிரமாய்க் குடியேற்றலும்
சாக்குச் சமாதானம் கூறலும்
சரிவரும் யாவுமென்றெத்தலும் - எனப்
போக்கினர் காலம் திலீபனோ - தன்றன்
பொன்னுடல் தேயத் தொடங்கினான்

மாய்வதொன்றே தன் கடன் இனி - என்று
மன்னவன் மண்ணின் விடுதலைத்
தீயை விழுங்கிக் கிடந்தனன் - ஈழ
தேசம் அழுது துடித்தனள்
பாயும் புலி பசும் புல்லினை - தன்றன்
பட்டினி போக்கப் புசிக்குமோ - அட
வாயில் வயிற்றில் விடுதலைப் பசி
வாட்டத் துடித்தது அவனுயிர்

காந்தி பிறந்த பெருநிலம் - புத்தன்
கருணை உரைத்த உயர் நிலம் - பச்
சோந்திகளின் புதரானதால் - எங்கள்
சோகத்தை யாரும் மதித்திலர்
ஏந்தல் திலீபன் இறந்திடில் - எமக்(கு)
என்ன எனத் திமிர் கொண்டுமே
சேர்ந்து இலங்கை அரசுடன் - சதி
செய்தனர் எம்மை ஒடுக்கவே

நீருமருந்த மறுத்துமே - கொடு
நீசர்கள் நெஞ்சிலுறுத்தவே - இந்தப்
பாரினில் பட்டினிப் போர் செய்த - எங்கள்
பாலகன் தன்னுயிர் நீத்தனன்
ஊரெங்கும் வேதனை சூழ்ந்தது - கொடி
யோரின் சொரூபம் தெரிந்தது - நெஞ்சில்
ஈரமில்லாதவரோடினிக் - கதை
ஏதென ஈழம் தெளிந்தனள்
□

# அன்னை பூபதி

இன்னுயிர் ஈந்த திலீபனின் - பின்
எதற்கினி வாழ்வெனக் கென்றுமே
தன்னுயிர் நீத்திடு நோக்குடன் - ஒரு
தாய் எழுந்தாள் அந்த நாளிலே
அன்னை அவள் பெயர் பூபதி - தன்
ஐம்பத்தியாறு வயதிலே
உன்னி விடுதலைக் காகவே - தன்
உணவை மறுத்தனள் சாகவே

பூபதி வாழ்வும் முடிந்தது - ஈழ
பூமியிற் சோகம் கவிந்தது
சேய் பதினாயிரம் சேர்ந்திட - புலிச்
சேனை பெருகிச் சிறந்தது
வா பதில் சொல்கிறோம் என்று - இந்திய
வானர சேனையிற் பாய்ந்தது
தாயவள் காளி விழித்தனள் - இந்தத்
தாரணி ஆடச் சிரித்தனள்
□

## இரண்டாம் ஈழப்போர்

**வேறு**

நெஞ்சிலெரியும் நெருப்போடு எம்மினத்து
வஞ்சினத்தர் தங்கள் வரலாற்றை மாற்றுதற்காய்
துள்ளி எழுந்தார் துயர் எமக்குத் தூசென்றார்
அள்ளியெடுத்தார் அஸ்திரங்கள் கைகளிலே

**வேறு**

சரமாரியாய் அம்பு வீச்சு - அட
சதிகாரர் திரும்பலே சரியென்று ஆச்சு
கரவோடு இனியென்ன பேச்சு - வெற்றி
காணாமல் நானினி விடுவேனோ மூச்சு

என்றீழ அன்னை எழுந்தாள் - அவள்
இனிய நற் புதல்வர்கள் களத்தில் நிறைந்தார்
வென்றிடும் யுத்தம் புரிந்தார் - இது
வீண் வேலையென்றிந்து வீணர் தெரிந்தார்

**வேறு**

வீரர்தம் போர்த்திறத்தை - அவர்
வித்தை கரந்தடியைக் - கண்டு
பாரதம் மூட்டைகட்டி - வந்த
பாதை திரும்பியதாம்

நேரெதிர் கொள்ளவொண்ணா - எங்கள்
நிலத்து வேங்கைகளோ
ஊரதெல்லாம் நிறைந்தார் - மக்கள்
உளம் மகிழ்வடைந்தார்.

□

ஈழ தேசம் - ஈழத்தாய் சபதம்

**வேறு**

செந்தமிழ் ஈழமென்று திடங்கொள்ளுவார் - உயர்
திறன் கொள்ளுவார் உறு பகை வெல்லுவார்

வெள்ளிப் பனிக்குளிரை மேவி நடப்போம் - செல்வ
மேலைத் திசை முழுதும் தாவியுழைப்போம்
அள்ளிப் பொருள் கொணர்ந்தெம்
நாட்டிற்களிப்போம் - உயர்
ஆற்றல் விளைத்தெமது ஈழமமைப்போம்

செந்தமிழ் நாட்டினிற்கோர் பாலமமைப்போம்
சேதுக் கடல் வழியில் வாணிபஞ் செய்வோம்
இந்திய ஐக்கியத்தை என்றும் மதிப்போம் - எனில்
எம் தமிழ் ஈழமென்று தோள் கொட்டுவோம்

இந்து சமுத்திரத்து நாடனைத்திலும்
எங்கள் உறவுதனைப் பேணி வளர்ப்போம்
செந்தமிழ்த் தேன்மொழியை உலகனைத்தும்
செப்பிடும் வார்த்தையெனச் சிறக்கச்செய்வோம்

சிங்கள நாட்டிடத்தில் சினேகஞ் செய்வோம்
தேயிலை பெற்றெமது செந்நெல் அளிப்போம்
வங்கத்துள் ஓடிடும் மாவலியின் மிகையை
வன்னித் திசை திருப்பிப் பயிர்செய்குவோம்

வங்கக் கரையினிற் பொன் மணல்தனிலே
சிங்கள நாட்டிளம் பாலருடனே
தங்கத் தமிழிலிசைப் பாடலமைத்தே
தாளங்கள் போட்டு நிலவாடி மகிழ்வோம்
களுதாவளை தரு நீர் வெற்றிலையுடன்
காலியின் பாக்கினிக்கக் கவிதைசெய்வோம்
பழுதாகாத கண்டி மிளகினுக்கே
பனை தரும் வெல்லமதைக்கொடுத்திடுவோம்

ஈழத்து வேழ நிரை பல பிடித்தே
ஏற்றன்பு செய்பவர்க்கே அனுப்பி வைப்போம்
பாழும் பணத்தினுக்காய் அவற்றைக் கொன்றே
பல்லைப் பிடுங்கி விற்கும் கொடுமை செய்யோம்

வலை வளைந்தே தெற்கு ஈழக் கடலில்
அலைகளில் தாவி மீன்கள் அள்ளிக் குவிப்போம்
மலையகச் சோதரரின் மரக்கறிக்கே
மாற்றிக் கொடுத்து வளம் பகிர்ந்துயர்வோம்

குமணை விலங்குச் சரணாலயத்தை
கூட்டி வெளி நாட்டினர்க்குக் காட்டி மகிழ்வோம்
யமனைச் சுமந்திடும் காட்டெருமைகளை
நட்புடன் காத்து வெண்ணைப் பால் பெறுவோம்

மாங்குளம் எங்களது தலைநகராம்
வன்னிப் பெருநிலமே அதற்கரணாம்
ஓங்கிய முல்லை கடற் படைத்தளமாம்
உயர் திருகோணமலை துறைமுகமாம்

மன்னார் மடுப்பகுதி கிறிஸ்தவரின்
மறையொலிக்கும் புனித நகர்ப்புறமாம்
பன்னாட்டு வான்கலங்கள் வந்து தரிக்க
பலாலி விமான தளம் பயன்படுமாம்

எல்லை அம்பாறையிலே படைகுவிப்போம்
ஈழப் பகைவர்களின் தொடைமுறிப்போம்
அல்லை எம் சேருவிலை கந்தளாயில்
அன்னியர் ஆளுகைக்கு விடை கொடுப்போம்

என்றும் இஸ்லாம் கிறிஸ்து இந்து நெறிகள்
எங்கள் மதங்களென வரைபமைப்போம்
ஒன்று தமிழர் குலம் என்னும் விதியை
ஓங்கி முரசறைந்து சாசனம் செய்வோம்

அட்டாளைச்சேனை நிந்த வூர்ப் பகுதி
அண்ணல் நபி முகம்மத் சொன்ன ஷரியத்
சட்டங்களுக்குரிய பகுதியென
சாசனத்தில் வரைந்து பொறித்திடுவோம்

பதவியா மணலாறு நிலங்கள்தன்னில்
பலவந்தமாக வந்தே ஏறிவர்க்கே
உதவிகள் செய்து அன்பாய் உபசரித்தே
ஊருக்கனுப்பிவைத்தே உயர்வளிப்போம்

கல்வி கலாச்சார மையமெனவே
காசினி யாழ்நகரைப் போற்றச்செய்வோம்
செல்வம் பெருக்கும் பொருளியல் மையமாய்
செந்நெல் விளைக்கும் மட்டு நகரைச் செய்வோம்

ஆயுதஞ் செய்வோம் உயர் காகிதஞ் செய்வோம்
அண்டம் நடு நடுங்கும் குண்டுகள் செய்வோம்
தேய மனைத்தும் அன்பைப் பேண
உழைப்போம் - எனில்
செந்தமிழ் ஈழமென்று தோள் கொட்டுவோம்
□

## தமிழீழ மாதா பெருமை

முன்னைய ஆரிய ராமனின் முன்னே
முறுகிய மீசை எது - எங்கள்
அன்னை பயங்கரி செந்தமிழீழத்தை
ஆண்டவன் மீசையது

சாமம் இசைத்துச் சதாசிவன் மாமலை
தாங்கியதாருடைத் தோள் - பெருங்
காமத்தில் மூழ்கினும் சைவப் பெருநெறி
காத்த இராவணன் தோள்

அந்தர மாயைகள் செய்து பெண் மூக்கில்
அடித்தவன் வீழ்ந்திடவே - வைத்த
இந்திரசித்தன் எவன்? எமதீழத்து
ஏந்தலின் வாரிசவன்

புத்தனின் அட்சய பாத்திரம் பெற்ற அப்
பொன் மணிமேகலையாள் - அதை
இத்தரை மீதில் எறியப்பிடித்த கை
எம் தமிழீழப் பொய்கை

ஆழக் கடலிற் கலம் பல ஓட்டியே
அண்டை அயலவர்கள் - உயிர்
வாழ உணவு கொடுத்த கை - எம் தமிழ்
ஈழத்துழவனின் கை

வேத விவிலியம் தன்னைத் தமிழினில்
மீட்டியதாருடை கை - எங்கள்
நாதன் அறுமுக நாவலனாம் - உயர்
நல்லை நகர் மகன் கை

பண்டைய பாணரின் யாழ்வகை ஆய்ந்து
பயன்தரு நூல் தந்த கை - எங்கள்
தண்டமிழீழத் தவத்திரு சேர் விபு
லானந்த ஞானியின் கை

நாயினுங் கீழ்க்கடையாய்த் தமிழ் வாழ்கையில்
நாமொரு நாடமைப்போம் - எனத்
தாயினிற் சத்தியம் செய்த கை யார்கை? - எம்
தம்பியின் பொற் திருக்கை

ஆண்ட பரம்பரை மீண்டுமொருமுறை
ஆழ்வதிலென்ன குறை - எனக்
கூண்டுள் இருந்தும் குமுறியவாய் - கவிக்
கோமகன் காசியின் வாய்

□

## போகின்ற ஈழமும் வருகின்ற ஈழமும்

### வேறு
### போகின்ற ஈழம்

எலி நிகர்த்த நெஞ்சினாய் போ போ போ
ஏழ்மை தன்னில் மிஞ்சினாய் போ போ போ
பழி முடிக்க அஞ்சினாய் போ போ போ
படையிலாது துஞ்சினாய் போ போ போ
வலி மிகுந்த புலிகளை நம்பாது
வடவர் தன்னை நம்பினாய் போ போ போ
கிலி மிகுந்த மதியினால் மென் மேலும்
கீழ்மையில் உழன்றனை போ போ போ

விதி கெடுத்த மதியினாய் போ போ போ
வீணிலே உறங்கினாய் போ போ போ
சதி நிறைத்த உறவினாய் போ போ போ
சாவிளிம்பில் நின்றனை போ போ போ
பொதி நிறைத்த தீர்வுகள் மேல் ஆர்வம்
போக்கி நின்று தேங்கினாய் போ போ போ
எதிரி தன்னை நம்பினாய் போ போ போ
இழிமை வாழ்வு கூட்டினாய் போ போ போ

பலமிழந்த தோளினாய் போ போ போ
பழமை பேசு தொழிலினாய் போ போ போ
குலமிழந்த நிலையினாய் போ போ போ
குருதி கண்டு அஞ்சினாய் போ போ போ
நிலமிழந்து அகதியாய்ப் பார் மீதில்
நிலையிலா துழன்றனை போ போ போ
சலமிழிந்து பகைவர்முன் நாய்போலே
சமதை வாழ்வைக் கெஞ்சினாய் போ போ போ

## வருகின்ற ஈழம்

புலி பொறித்த கொடியினாய் வா வா வா
புதிய பெண்மை நடையினாய் வா வா வா
ஒளி படைத்த மொழியினாய் வா வா வா
உரிமை கொண்டிலங்குவாய் வா வா வா
வலிமை மிக்க படையினை உன்னோடு
வைத்துயர்ந்து நின்றனை வா வா வா
கலி முடித்துக் கிருதமா யுகம் காணும்
கடமையோடு மோதுவாய் வா வா வா

நிதி நிறைந்த திருவினாய் வா வா வா
நெஞ்சுரத்தில் விஞ்சினாய் வா வா வா
மதியுடைத்த படையினாய் வா வா வா
மனதிலென்றும் தெளிவினாய் வா வா வா
கதியிழந்த தமிழரை ஈடேற்றும்
கடமை கொண்டுயிர்த்தனை வா வா வா
எதிரி வந்து மோதுமுன் முன்னேறி
ஈழ வீரம் காட்டுவாய் வா வா வா

அமைதிபெற்ற நடையினாய் வா வா வா
அவனி தந்த புகழினாய் வா வா வா
சமதை பெற்ற நிலையினாய் வா வா வா
சாவை வென்றுயிர்த்தனை வா வா வா
மமதை கொண்ட பகைவரின் முன்பேகி
மாண்பு காட்டி நின்றனை வா வா வா
உமை மாகாளி சூலியின் கண்ணோக்கால்
உரிமை கொண்டுயர்ந்தனை வா வா வா
□

## சுதந்திரப் பெருமை

**வேறு**

ஈழ சுதந்திரம் வேண்டி நின்றார் - வே(று)
எதையும் விரும்புவாரோ
இனிய நறுந்தேன் இருக்கையில் வேம்பின(து)
எண்ணெயைக் குடிப்பாரோ
வாழ்வினில் ஓர் கணமேனும் விடுதலை
மகிழ்வினை உணர்வாரேல்
வண்டமிழ் ஈழ நன் மண்ணினிற் தம்முயிர்
மாய்ந்திடல் விரும்பாரோ

தாயவள் ஈழநந் நாடதன் மேலுள
தாகத்தில் துடிப்பாரேல்
நோயினும் பிணியினும் அன்னைமண் விடுதலை
நோக்கினில் பிறழ்வாரோ
ஆயிரம் கோடி பணமிருந்தாலும் எம்
அன்னையின் மடி மீதில்
போயுயிர் நீத்து இப் பொய்யுடல் அழிவதில்
புளகமதடையாரோ

அவனியில் நாடொன்று அற்று அலைந்திடும்
அகதியென்றிழிவோடு
பவனிகள் செய்திடும் பகட்டினில் யாது
பயனென உணர்வாரேல்
யமனிடமும் தமதின்னுயிர் போகையில்
யாசகம் புரியாரோ
எமதுயிர்த் தாயகம் தனிலெனைக் கொல்லென
இரந்திட முனையாரோ

அன்னை மண் தந்திடு கூழதுவாயினும்
அருமையை மறவாரேல்
அன்னியன் பிச்சையில் அமிழ்தமருந்தினும்
அக மகிழ்ந்திடுவாரோ
பின்னமிலா எமதீழ சுதந்திரப்
பேற்றினை நினைவாரேல்
பேதையராய் அயல் நாட்டிலுழல்வதைப்
பெருமையென்றுணர்வாரோ

விந்தைகள் செய்தெம(து) இன் தமிழீழத்தை
வீழ்த்திட முனைவாரேல் - அந்த
வித்தகர் யாரெனினும் பகை கூட்டியே
வீழ்ந்திடல் நிஜமாமே
செந்தமிழ் ஈழத்திற் செங்களமாடிடும்
எங்களின் புலி வீரர் - இன்று
நிந்தை பட்டாலும் சுதந்திர ஈழத்தை
நிறுவுதல் நிஜமாமே
□

## இந்தியத் தமிழ் நாடே!
## உனக்கொரு வேண்டுகோள்

### வேறு

இந்தியத் தமிழ் நாடே - உனக்(கு)
இந்தவுலகினில் எந்த உரிமைகள்
இருக்குது பகர்வாயோ?

விந்தியத்தொடு குமரி - வரை
மேவிய மீன் புலி விற் கொடிகள்
உந்தனுக் கின்றுண்டோ? - இல்லை
ஒருமுகப்பட்ட நற் கருத்துண்டோ?
சுந்தரத் தமிழ் ஈழம் - மண்ணில்
தோன்றுது நீ உடன் துணை புரிவாய்
பிந்திடில் சரித்திரம் உன்
பேதமை தனை நகைத்தெழுதிடுமே

மத்தியில் அரசாள்வோர் - உன்றன்
மனவுணர்வெதனையும் கருத்திலெடார்
எத்தியுன் ஆசைகளை - அவர்
ஏற்பதுபோல் நடித் திகழ்ச்சி செய்வார்
கத்தியை அட்டைகளால் - செய்து
களத்தினில் சாகசம் புரி நடிகர்
உத்தமத் தலைவர்களாய் - உனக்(கு)
உயர்ந்தவராய் இன்று தலை நிமிர்ந்தார்

உத்திகள் பயின்றவரும் - பெரும்
உண்மையை மூடிடத் தெரிந்தவரும்
எத்திசையடங்கலுமே - நின்று
எம் தமிழ் ஈழத்தை இழிவு செய்தார்
சத்தியம் பிறழ்ந்தவரும் - கடுஞ்
சாகசத் தமிழினிற் கதைப்பவரும்
வித்தைகள் புரிகின்றார் - நீ
வீணரின் தாயெனத் தலை குனிந்தாய்

சாதியைப் போற்றுகிறாய் - உயர்
சமத்துவத் தீயில் நீர் ஊற்றுகிறாய்
ஆதியைத் தூற்றுகிறாய் - உனை
ஆரியத் தலைமைக்கு மாற்றுகிறாய்
வேதியர் எனப்படுவோர் - இன்று
வேண்டுமென்றே தமிழ் மொழிக்கெதிராய்
நீதியைப் பெறுகின்றார் - நீ
நினைவறு நீள்துயிலுறுகின்றாய்

போதனை மொழியெனவும் - பலர்
பலர் புரிந்திடுந் தமிழ் வரல் பழியெனவும்
சோதியை அகச்சுடரை - எங்கள்
சொந்த அருந்தமிழ் மொழியினில் - ஆ
ராதனை புரிந்திடவும் - அந்த
ராக்கதர் தடை பல போடுகின்றார்
வேதனை ஈதறிவாய் - நீ
விழித்தெழு உடனுறு தீதறிவாய்
□

## முடி கவி

ஓடிப் பிழைத்துயிர் தப்பியே - உயர்
ஓர்மமில்லா மனம் ஒப்பியே - மேற்கை
நாடிப் புகலிடந் தேடியே - வந்து
நாயினுங் கீழ்க் கடையாகினோன்
வாடும் வயிற்றுக்குக் கஞ்சியே - தினம்
வாய்த்தும் மகிழ்விற் தமிழ் மகள் - நின்று
ஆடும் அரங்கச் செந்நாவினைக் கொண்ட
ஆன்ற புலவர்கள் போன்றிலாது

கண்களிழந்த கபோதியால் - இரு
கையுமில்லா அங்கவீனனால் - உயர்
வெண் களிகொண்டு நற் சிற்பங்கள் - செய்து
வித்தை புரிந்திடலாகுமோ
பண்களியைந்த நவகவி தந்த
பாரதியின் நடை பற்றினும் - வெறும்
எண்களினாற் கவி கூறல்போல் - எம(து)
ஈழ சரித்திரம் கூறவே

ஊமை இசைத்த சங்கீதமாம்-இது
உண்மையைப் பொய்யன் உரைத்ததாம் -நிலத்(து)
ஆமை முனைத்ததோர் வேகமாம்-உயர்
ஆலப் பருந்தினைப் பூச்சிட்டே - என்றுஞ்
சாலப் பொருந்திடக் கூடுமோ - கவி
சாற்றிடத் திக்குவாய்க் காகுமோ - வண்ணக்
கோலத்தைச் சிந்தி மழலை நான் - அன்னை
கொஞ்சிடுவாள் எனக் காட்டினேன்

சீலக் குணங்களில்லாதவன் - என்றுஞ்
சிந்தனையில் உயர்வற்றவன் - தமிழ்ப்
பாலைக் குடித்த தகைமையைப் - பெரும்
பாக்கியமாகக் கருதுவோன்
வாலைக்குமரியை ஓர் கிழம் - பெரு
வாஞ்சையுடன் எண்ணிப் பார்த்தல் போல் - இதை
நூலென எண்ணி எழுதினேன் - எந்
நுடங்குதற்கும் பொறுப்பேற்கிறேன்
□

ஈழத்தாய் சபதம் முற்றிற்று

## யாழ் நூலக எரிப்பு
**(நினைவுக் கவிதை)**

ஏன் செய்தார் இந்த இழிவு தரும் செய்கை தனை
சதிகாரர் எங்களுக்குச் சகுனப் பிழை காட்ட
மூக்கை அறுத்துவிட்டு முழு வியளம் வந்தனரா?
போக்கிரிகள் ஏன் இந்தப் பொல்லாப்பைச் செய்திட்டார்?
தீக்கு இரையாகத் தேசத்தின் செல்வத்தை
ஆக்கியதால் மூடர் அடைந்த நயமென்ன?

ஆங்கிலத்தில் ஆரியத்தில் அருந்தமிழில் சிங்களத்தில்
பாங்காய் அறிவு தந்து பயன்பட்ட நூல்களெல்லாம்
தீங்கென்ன செய்தன இத் தீயவர்க்குத் தீயிலிட?

அன்னைத் தமிழ் மண்ணின் அறிவுக்கு அணைபோடும்
அவலை நினைத்து வெறும் உரலை இடித்தனரா?
சூரியனைக் கொள்ளியினாற் சுட்டெரிக்க முயல்கின்ற
காரியத்தை இந்தக் கடைப்பழிகள் ஏன் செய்தார்?
நாசத்தைச் செய்து நம்மை அழித்திடவா
தேசத்தின் சொத்தைச் சிதைத்தார் முழு மூடர்

உள்ளத்தில் உண்மை ஒளி பாய்ச்சும் பேரறிவு
வெள்ளத்தின் மீது வெறுப்புற்ற மூடர்களாய்
மன வழுக்கை நீக்கி மதி கூட்டும் நல்லறிவுக்
குளத்தோடு கோபித்துக் குப்பையை ஏன் போட்டார்கள்

தூசி விழுந்த கண்ணைத் துடைத்து விடமாட்டாமல்
ஊசி கொண்டு குத்தி ஒளி இழந்த பேதையராய்
தம் கண்ணில் தாமே மண் வாரிப் போட்ட இந்த
வம்பர்களைப் பார்த்து வரலாறு சிரிக்கிறது
மானுடமோ தன்றன் மதிப்பைக் குறைத்திட்ட
ஈனப் பிறவிகளை எண்ணிக் குமைகிறது
மண்ணை இழிவுசெய்ய மலம் சொரிந்து மகிழ்ந்திட்ட
பொண்ணையரைப் பார்த்திந்தப் பூமி முறைக்கிறது

பெண்மையர் எனவும் வரலாம்

உளங்காட்டும் கீழ்மை உணர்வைப் பறைசெய்த
வளங்காதவர்களுக்காய் வையம் சிரிக்கிறது
மூக்கையறுத்துத் தடிமலுக்குச் சிகிச்சை செய்த
மொக்குத் தனத்தையெண்ணி முழுவுலகும் அழுகிறது

சிரித்தென்ன அழுதென்ன திருவழிந்து போனபின்னர்
உரித்தாய் எமக்கிருந்த ஒப்பற்ற நூல்கள்தமை
அரித்த கறை யான்களுக்கு ஆறறிவா ஓரறிவா
யார்க்கிதனால் லாபமென்று நாய்க்குணத்தோர் கேடு செய்தார்?
அறிவை அழித்தொழிக்க அற்பர்கள் ஏன் பாடுபட்டார்
கடலை அழுக்காக்கக் காறி உமிழ்ந்தது போல்

காக்கை முயன்றது போல் எனவும் வரலாம்

முடைநாற்றச் சாக்கடையை முல்லைக் கெறிந்ததுபோல்
அம்புலியைக் கையால் அணைக்க முயன்றதுபோல்

அன்னை தமிழை அறிவுச் சுடர் வீசும்
பொன்னை இழிவு செய்யப் புகையடித்துப் பார்த்தாரா?

கோயிற் சிலைக்குக் குத்துகின்ற முள்ளெடுத்துச்
சாத்தி மகிழ்ந்திட்ட தரங்கெட்ட செய்கையினால்
யாருக்கு நட்டம்? நாங்கள் விழுதெறிந்த
ஊருக்கா? இல்லை உயிராம் தமிழுக்கா?
பாருக்கு கல்விப் பயனறிந்த யாவருக்கும்.

அன்னை தமிழீழத்தின் அறிவுக் கருவூலத்தில்
சின்ன மதியால் சேறிறைத்த தீச்செயலை
முழுவுலகும் பார்த்து மூக்கில் விரல் வைக்கிறது!
இப்படியும் ஓர் உணர்வா? இப்படியும் ஓர் பகையா?
யார் இவர்கள்? எக் காட்டு நாய் நரிகள்?
ஏன் இவர்கட்கிந்த இழிபுத்தி-இந்தப்
பாரின் வரலாற்றில் பழி முடிக்க இத்தகைய
கோரச் செயலைக் கொடுமைதனை ஓர் நாளும்
யாரும் புரிந்ததில்லை நாகரிகம் கெட்டதில்லை

பாசிசத்திலூறிப் பழிபுரிந்த ஹிட்லரும் தன்
நாசிப் படைகளுக்கு ஆணையிட்டபோதினிலே
வீசு குண்டை லண்டனுக்கு மியூசியத்தைத் தாக்காதே
என்றுதான் சொன்னான் ஏன் சொன்னான்?அங்குதான்!
அறிவுக் கருவூலம் அடங்கிக் கிடந்ததன்று

மோடையரோ? இந்தக் கேம கண்ண யோதையரோ[1]
தெற்காசியாவின் சிறந்ததொரு நூலகத்தை
செக்கோ சிவலிங்க மென்றோ அறியாமல்
நக்கி முகர்ந்தும் நலமெதுவும் காணாமல்
கால் தூக்கி நின்று கழிவு செய்த பேதமையை
மறக்க முயன்றாலும் மனமதனைச் செய்திடுமா?

பாவியர்கள் எங்கள் படிப்புச் சுரங்கத்தைக்
காவு கொண்ட இந்தக் கயமைத் தனந்தன்னை
நாவு கொண்டு தூற்ற நமக்கேது சொல் உலகில்?
சாவு வந்த பின்னும் தமிழ் மீது பற்றுடையோர்
ஆவி இவர்மீது அழுதழுது சாபமிடும்

செய்வதையும் செய்துவிட்டுப் பொய்மையிலே ஊறியவர்
கண் தீப் புனல் சொரியும் கலைவாணித் தாயவளாம்
வெண்தாமரையாளை வேதனைக்குள் ஆழ்த்திவிட்டு
புண்தீவிரம் குறையப் புனுகு தடவுகிறார்
தயக்கமெதுவுமின்றித் தமிழை அழித்தவர்கள்
இயக்கம் அமைத்தெமக்காய் என்ன செய்யப்
போகின்றார்?
கல்வி தனை மதியாக் கயவர் எமக்காகக்
கல்சேர்த்து நூல் சேர்த்துக் காட்டுகின்றார் பம்மாத்து[2]
ஆடைதனைத் தூக்கி அவர்கள் வெட்கம்
போக்குதற்காய்
முகம் மறைத்து நிற்கின்றார் முழுவுலகும் சிரிக்கிறது.

வார்த்தையினாற் சீறி வசைபாடி நின்றாலும்
ஆர்த் தெழுந்து இந்த அறிவிலிகள் தோற்றோட
போர்த்திறன்கள் காட்டிப் புயலாயடித்தாலும்

கழுதையறியாது கற்பூர வாசனையை
கல்வி அதற்கு வெறும் காகிதம் தான் தின்று விடும்
அறிவை அசைபோடும் ஆர்ப்பரித்துக் கூச்சலிடும்.

ஆதலினால் என்றன் அருமை உறவுகளே!
தீதே இயற்கையதாய்ச் செயல்புரிவோரால் உற்ற
வேதனையைத் தூக்கி வீசியெறிந்திடுவோம்.
பாதகர்கள் செய்யும் பழிக்கு மருந்தாக
கல்வியிலே ஊறிக் கரைதேர்ந்து நாமுயர்வோம்
இல்லங்கள் தோறும் இணையில்லா நூல்கள் பல
நாம் சேர்த்து எங்கள் நாட்டிற்காய் வைத்திடுவோம்

காய்ந்து வெடித்த கழித்தரையில் நீர் சேர
ஓய்ந்து விடாது உடன் முகிழ்த்துப் பூச்சொரியும்
ஆம்பர் குவளை அரவிந்தமாய் மலர்வோம்.
சாம்பரிலே நின்று பீனிக்ஸ் பறவைகளாய்
மீண்டும் எழுவோம் விரைந்துயர்வோம் இஃதுறுதி.

முற்றும்

1. சிங்ஹலயா மோடையா(மடையர்) காம கண்ண யோதையா(சோற்றுத் துருத்திகள்) என்பது சிங்களவர் தமக்கே கூறிக் கொள்ளும் பழமொழி.
2. இது இலங்கையரசின் வெண்தாமரை இயக்கம் பற்றியது.

□

# சுதந்திரத் துள்ளு

ஆடுவோமே துள்ளிப் பாடுவோமே ஆனையிறவை நாம்
அடைந்துவிட்டோமென்று - ஆடுவோமே

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - தமிழ்
ஈழம் கிடைப்பது உறுதியாச்சு
சங்குகொண்டே வெற்றி ஊதுவோமே - தமிழ்த்
தாயின் பதம்பணிந்து ஆடுவோமே-

(ஆடுவோமே)

பார்ப்பனியம் எமைப் பழிக்கும் காலமும் போச்சே -வீணே
பாரதத்தை நம்பி நிற்கும் காலமும் போச்சே - எம்மை
ஏய்ப்பாரைப் போற்றிநின்ற காலமும் போச்சே - தமிழ்
ஈழம் கிடைக்குமென்பதுறுதியாச்சே

(ஆடுவோமே)

காட்டிக் கொடுப்போரெல்லாம் கலங்கிநின்றார் - எங்கள்
கண்மணிகள் போர்க்கலையில் துலங்கி நின்றார்
மாட்டி வடபுலத்துள் அன்னியர்கள் - ஓடும்
வழி தெரியாமல் இன்று திணறுகின்றார்

(ஆடுவோமே)

வானிற் தரையிலெல்லாம் தமிழ் வீரம் - தெற்கு
வங்கக் கடல் முழுதும் தமிழ் வீரம்
பானை பிடித்தவர்கள் பலபேரும் - பெற்றார்
பாயும் புலிகளெனும் புகழாரம்

(ஆடுவோமே)

அன்னை பராசக்தி துணைபுரிவாள் - எங்கள்
மண்ணினை நாம் பெறவே அருள் புரிவாள்
முன்னைத் தமிழன் புகழ் மீட்டிடுவாள் - என்றும்
தன்னைத் துணைபுகக் கை காட்டிடுவாள்

(ஆடுவோமே)

□

## மீண்டும் புது வசந்தம்...

புத்தாண்டில் மீண்டும் புது வசந்தம் பூக்கவென்று
மெல்லத் துளிர்த்து விரைவாய் வருகிறது

கொல்லும் பனியிற் குகையுள் ஒளிந்திருந்து
மெல்ல எட்டிப் பார்க்கின்றோம்
விரையும் வசந்தத்தை.

சிங்கங்கள் எம்மைச் சிதைக்க முயன்றிடலாம்
ஆனை வந்து தன்றன் அடியால் நசுக்கிடலாம்
பாம்பு தேள் பூரான் பதுங்கிக் கடித்திடலாம்
கொத்திப் பிடுங்கக் கோட்டான்கள் காத்திருக்கும்
எத்தித் திருட எதிர்பார்க்கும் காக்கையினம்.

ஆனாலுமென்ன? அழகு வசந்தமெனில்
நாமுந்தான் காண்போமே!
நமக்கென்ன குறையதனால்?

மொட்டு மலராய் முகிழ்த்துக்
கனியாகிக் கொட்டுமென எண்ணிக்
குதிக்கின்றோம். என்ன பிழை?

எட்டி எட்டிப் பார்த்தும்
எட்டாக் கனிகளென
விட்டு விடவா நாம்
வீண் முயற்சி செய்திட்டோம்?
இல்லை இல்லை அஃது
என்றும் நடக்காது.

கனி பறிக்க முற்பட்ட கஷ்டம் போய் இப்போது
அணில் பறித்துத் தருமென்று
ஆவலுடன் எதிர்பார்க்க
நாமென்ன மூடர்களா? ஞாபகமில்லாதவரா?

மொட்டவிழ்க்க வென்று முயலும் வசந்தம் தன்
கட்டவிழ்ந்து வீணே கருகி உதிராமல்
துளிர்கள் சருகாகித் துயராய் நிறையாமல்
பட்டமரம் போலப் பார்க்கும் இடமெல்லாம்
கம்புகளாய் முள்ளாய்க் காட்சியளியாமல்

ஆதாரந்தேடி அலையும் பயங்கரமாம்
வேதாளமேறி வீற்று இருக்காமல்

காலச் சுழல் கொணர்ந்து காட்டும் புதியதொரு
கோலத்தால் மீண்டும்பேய்க் கூதல்
குறைந்தெங்கும்
அரும்பும் வசந்தத்தை அனுபவித்துப் பார்ப்போமே!

வந்த வசந்தத்தை வாய்ப்பாக்கி எங்களது
சொந்த நிலத்தில் சுதந்திரமாய்க் கனிபறிக்க
மீண்டும் முயல்வோம் விரையும் வசந்தமெமைத்
தாண்டிச் செல்லாது தடுக்க வழிபார்ப்போம்.

□

(புதிய பேச்சு வார்த்தைக்காக எழுதியது)
ஈழமுரசு, பிரான்சு 17-23 டிசம்பர் 2002

## ஒரு நத்தார் சபதம்

புத்தாயிரமாண்டின் புகழ் பூத்த இத்தினத்து
நத்தாரில் அன்போடு நானிலத்தை
வாழ்த்திடுவோம்.

ஏசு சுதன் எம்மை இரட்சிக்க வந்த குரு
தேசமெலாம் அன்பைத் தெரிவித்த மெய்ஞானி
ஆசையறுத்தோன் அடிதொழுது இத்தினத்தில்
நேசத்தைப் பேண நினைத்து முடிவெடுப்போம்.

இத்தரையின் மீது எமது உரிமைகட்கு
உத்தரவாதம் ஒன்றுமற்ற போதினிலும்
செத்து மடிந்து சிதைவுற்ற எம்மினத்தை
எத்தர்கள் தான் வந்து ஏமாற்றப் பார்த்தாலும்
புத்திகெட்டு அந்தப் பொறுக்கிகளின் முன்னிருந்து
கத்திக் கதைத்தெதையும் காணமுடியாவிடினும்
சித்தத்தில் தூய்மை சிந்தனையில் நல்லுணர்வு
மத்தியஸ்தர்மாரின் மனத்தில் மரியாதை
இத்தனையும் பேண இருந்து நாம் பேசிடுவோம்

பேயோடுசேர்ந்து பிரார்த்தனைகள் செய்வதுபோல்
நாய்வாலை நீட்டி நாம் நிமிர்த்திப் பார்ப்பதுபோல்
சாயா மனத்துச் சதி நிறைந்த எம் பகைமுன்
பாயாத சாதுப் பசுக்கள் என மாறிக்
காயாதிருந்து கனிவோடு பேசிடுவோம்.

வாயாற் கதைத்து வரப்போவ தொன்றுமில்லை
ஆயாசம் மிஞ்சும் அடி சறுக்கும் ஆனாலும்
தாய்மண்ணின் மீட்பில் தனிப்பட்டுப் போகாமல்
தேயங்களின் துணையைத் தேட
நாம் பேசிடுவோம்.

அன்பிற் சிறந்த அறஞ்சேர்ந்த வாய்மையொடு
பண்பில் உயர்ந்த பழங்குடி நாம் எம் முயர்வை
நாடனைத்தும் காண நயவஞ்சகர்களினது
வேடங்கலைந்து விடப்பாம்புகள் தெரிய
உண்மைத் தருமமெங்கே
உள்ளதென்று இவ்வுலகின்
கண்ணிற் தெரியக் கதைக்க ஒருப்படுவோம்.

சோரத்திற் கொள்ளாது சூதிற்படைக்காது
வீரத்தினால் வெம்போர் வெற்றியினால்
நாம் படைத்த
அன்னை தமிழீழத்தாரமுதை வெம்பகைவர்
முன்வைத்துப் பேரம் முடிக்கின்ற சோகத்தைத்
தாங்கிச் சுமப்போம் தாய் மண்ணை மீட்பதற்காய்
ஏங்கும் மனத்தோடெடுப்போம் புதுச்சபதம்.
□

நம்நாடு, கனடா ஜனவரி 4 2001

## பொங்கடா தமிழா!

பொங்கடா தமிழா! சீறிப் பொங்கடா பொங்கு! - கெட்ட
சிங்கள தேசம் எம்மைச் சீரழித்திடவோ! - நாங்கள்
வங்கமா கடலில் வீழ்ந்து மாய்வதோ! இல்லை! - எங்கள்
தங்கமார் தமிழை ஈழத் தாயகந் தன்னை மீட்கக்
கங்கணங்கட்டிச் சீறிப் பொங்கடா பொங்கு! பொங்கு!

இங்கிலாந்தென்ன? நோர்வே இந்தியா அமெரிக்காவும்
பங்கமாய்ப் பாரபட்ச பாதமாய் நடந்த போதும்
அங்குலந் தன்னிற் கூட அன்னியன் எமது மண்ணில்
தங்கிடக் கூடாதென்றே பொங்கடா சீறிப்பொங்கு!

ஆயுதம் பெருக்கு! மோதும் ஆட்களைப் பெருக்கு! - சீறிப்
பாய் எம தெதிரி மீது பயந்தவன் புறங்காட்டச் செய்
சாயவை! சரித்து வீழ்த்து! சரமெனக் குண்டுமாரி
போய் விழ நொறுக்கு! அந்தப் பொறுக்கிகள் கழுத்திறுக்கு!
தேயம தெமது! டேய்! நீ திரும்பு உன் தேசத்திற்கு
நாயே! என்றுறுக்கு! அந்த நரிகளுக் கெதிராய்ப் பொங்கு!

ஆரடா எம்மை இங்கே அடங்கிடச் செய்ய வந்தோன்?
போரிலே தோற்கச் செய்து புல்லியராக்க வந்தோன்?
நேரிலாதுயர்ந்த வாழ்வால் நேர்மையால்
அன்பாற் பண்பால்
பாரினிற் சிறந்த சாதி பைந்தமிழீழச் சாதி.

வேரினை அறுத்து எம்மை வீழ்த்திட நினைத்தால் எங்கள்
சீரினை மறந்து புன்மைச் சிற்றெறும்புகளாய் மாற
ஊர் படையாமோ நாமென்றுறுமடா! உறுமிப் பொங்கிப்
பாரடா பகையை! கெட்ட பாதகரழியப் பாய்ந்து
காரடா தலையை! அந்தக் களிப்பிலே இனிதாய்ப் பொங்கு

(வேறு)

வல்வினைகள் போயகல் வாழ்வில் மீண்டும்
வசந்தமது தான் மலரப் பகையால் வந்த
தொல்லையெலாந் தொலைந்தோட ஈழ மண்ணிற்
தொழில் பெருக வளம் பெருக அமைதி சேர
கல்வி அருள் பக்தி நிறைந் தெங்குமின்பக்
களிப்பினிலே தமிழரினஞ் சிரிக்க மீண்டும்
செல் வந்த வீடெல்லாம் பொங்கு பொங்கல்
சிறப்பை விடோம் நாமென்று சீறிப் பொங்கு

□

(ஒரு பொங்கற் கவிதை - நம்நாடு, கனடா)

## விடியலை நோக்கி...

விடியலை நோக்கி விரைவாய் நடக்கின்றோம்
ஒடியல் சாக்கோலைப்பாய் ஒட்டை உடைசலுடன்
சின்னாச்சி தவித்துப்போய் தெருவோரம் நிற்கின்றா
என்னாச்சு தாயே எனக் கேட்க நேரமில்லை
கண்முன்னே தூரத்தில் காலைக் கதிரவனின்
தண்ணொளியின் வீச்சு தமிழீழமே பேச்சாய்
விடியலை நோக்கி விரைவாய் நடக்கின்றோம்

ஒப்பாரிச் சத்தம் உளமோ நெகிழ்கிறது
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய் வெய்யோனை
வாவு பரித் தேரேறி வாவென்றழைத்துக்
கூவின போல் கோழிக் குலங்களெல்லாம்
எங்களின் பெண்டிரும் ஏங்கி அழுகின்றார்
கையால் வயிற்றிலடித்துக் கதறுகிறார்
தமிழீழ நாட்டின் தார் இருளை நீக்கி
விடியலே வாவென்று வெடித்துப் புலம்புகிறார்

எங்கள் அவசரத்தில் இது பார்க்க நேரமில்லை

பொடியன் ஒரு திசையில் புலம் பெயர்வோர் ஓர்திசையில்
விடியலை நோக்கி விரைவாய் நடக்கின்றோம்

பெற்று வளர்த்தெடுத்துப் பெரியவர்களாக்கி
உற்ற துணையாய் உதவியாய் வாழ்வரென்று
எண்ணி இருந்த என் இனிய குஞ்சுகளை
வானப் பருந்தினைப் போல் வட்டமிட்டு வட்டமிட்டு
ஈன இரக்கமின்றி ஏன் கொத்திச் சென்றார்கள்
கிடைத்த நிழல் மரத்தின் கீழிருந்த எம் கூட்டை
உடைத் தெறிந்து குண்டுகளால்
உருவழித்தேன் போட்டார்கள்
என்று துடிக்கின்றா எம் இனிய சின்னாச்சி
சென்றவரைத் தேற்றச் சிறிதளவும் நேரமில்லை

பொடியள் ஒரு திசையில் புலம்பெயர்வோர் ஓர் திசையில்
விடியலை நோக்கி விரைவாய் நடக்கின்றோம்

நெஞ்சக் கனல் அடியில் நீறு அதன் மேற் பரப்பில்
அஞ்சாமை வாய்மை அனைத்தும் உணர்வுகளில்
துஞ்சாத கண்கள் துயர் சுமக்கும் தோட் புயத்தில்
கொல்லாயுதங்கள் குறிவைத்துத் தாக்குகிற
வல்லாண்மை எங்கள் வரலாற்றை மாற்றிவிடும்
தாபம் தமிழீழத் தாயகத்தின் மேற் தாகம்
கொண்டு களத்தில் குதித்து விட்ட எங்களது
பொடியள் ஒருதிசையிற் போக மற்றோர் திசையில்

கையிலே பாஸ்போட் கவனமோ காவலரில்
பொய்யும் புழுகும் புனைகதையும் ஞாபகத்தில்
பெட்டி படுக்கை பெரிதாகத் தூக்காது
கெட்டித் தனமாக போடிங் பாஸ் கைமாற்றி
விடியலை நோக்கி விரைவாய் வருகின்றோம்

பொடியள் ஒரு திசையில் புலம் பெயர்வோர் ஓர் திசையில்
விடியலை நோக்கி விரைவாகப் போகின்றோம்

ஒடியற் கூழ் தன்னை ஒரு நேரம் சாண் வயிற்றில்
ஊற்றி ஒரு நாள் உயிர் வாழ்வை நீடித்து
பெற்ற வயிற்றிலடித்தடித்து ஞாயிற்றை
வாவு பரித்தேரேறி வாவென்றழைக்கின்றா
சின்னாச்சி, எங்களுக்கோ
சிறிதளவும் நேரமில்லை

பொடியள் ஒரு திசையில் புலம் பெயர்ந்தோர்
ஓர் திசையில்
விடியலை நோக்கி விரைவாகப் போகின்றோம்
□
(ஒரு கவியரங்கிற்காக எழுதப்பட்டது)

# இசைப் பாடல்கள்

## பாடவா...

பாடவா அந்த அற்புதப் பாடலை பாடும்
பூங்குயிலே - உன்னோ(டு)
ஆடவா ஒரு ஆனந்த நர்த்தனம் ஆடும் மாமயிலே

வீரம் சேர்ந்தது ஈழமண் மீதினில்
வேங்கைக் கன்றுகள் பாய்ந்து பரவின...

வீரம் சேர்ந்தது ஈழமண் மீதினில்
வேங்கைக் கன்றுகள் பாய்ந்து பரவின
ஆரமாய்ச் சயனைட் அமுதம் தனை
ஆசையாய்த் தம் கழுத்தில் அணிந்தன

பாடவா... ...

நேரிலாத தலைவனின் பாதைமுன்
நீசர் ஓடிப் புறமுதுகிட்டனர்

நேரிலாத தலைவனின் பாதைமுன்
நீசர் ஓடிப் புறமுதுகிட்டனர்
ஊரிலெங்கும் மகிழ்ச்சி நிறைந்தது
உண்மை வீரம் தியாகம் உயர்ந்தது

பாடவா... ...

## தூய வரிப் புலியே

தூய வரிப் புலியே நீ தூங்கிடு என் மகனே
கல்லறை மெத்தையிலே நீ கண்துயில்வாய்மகனே
ஆராரோ ஆராரோ

காடென்றும் மேடென்றும் நீ அலைந்தாய் - எங்கள்
கண்ணீர் துடைப்பதற்கே - சொந்த
நாடொன்றைத் தந்ததில் நாங்கள் உறங்கிட
நாளும் உழைத் துதிர்ந்தாய்
வீடென்ற ஒன்றை மறந்து மரக்கிளை
மீதினிலே துயின்றாய் - இன்று
பாடையில் உன்னை வைத்தார் மகனே - கண்
பட்டு விழுந்தனையோ

ஈழமணித் திருநாட்டினைக் கண்டிட
ஏங்கித் துடித்தவனே - மத
வேழ நிகர்த்த பகைதனை ஓட்டிய
வேங்கை மறத்தினனே
தாழக் கிடந்த இனத்தினைத் தூக்கிய
தங்கத் தமிழ்ச் சுடரே - உன்னை
ஆழப் புதைத்தனரோ விதையாகினை
ஆறத் துயில்வாயடா

## உறுமல் ஒன்று கேட்குது

உறுமல் ஒன்று கேட்குது... உறுமல் ஒன்று கேட்குது
உரிமை கேட்கும் வேங்கையின் உறுமல் ஒன்று கேட்குது

மறுமலர்ச்சி காணவென்று மறவர் கூட்டம் வருகுது
மானம் காத்து அடிமை வாழ்வை மாற்றும் வீரம் பெருகுது
தறிகெட்டோட பகைவர் சேனை தமிழர் மாண்பு தெரியுது
தாய் மண் காக்கும் ஈழப்போரின் தகைமையின்று புரியுது

துயிலும் வாழ்க்கை போனதென்று துள்ளி ஈழம் ஆடுது
துயரொழிந்து கதிரின் சோதி தோன்றக் கண்கள் நாடுது
மயிலின் பீலி கேட்ட வாய்கள் மௌனமாக மூடுது
மக்கள் வாய்கள் எமது தேசம் மலருமென்று பாடுது

இரந்து கேட்டு உரிமைதன்னை எச்சிற்
பிச்சை கொள்வதோ
கரந்தடித்துப் பகைமையோட்டக் கட்டினோம் புலிப்படை
விரைந்து பாய்க வீரரே இவ் வீணர் மீதில் என்றுமே
இரைந்து பாடும் பாடல் எங்கள் இதயமெங்கும் நிறையுது

## இந்தியாவே! இந்தியாவே!

இந்து மகா சாகரத்தில் இந்தியாவே-வையத்(து)
இதயமென நீ பரந்தாய் இந்தியாவே
செந்தமிழர் தாகமதாம் ஈழநாட்டை - நீ
சிந்தை கொள்ள அஞ்சுவதேன் இந்தியாவே

ஆதிசிவன் பெற்ற தமிழ் அன்னை மாதை - நீ
அரவணைத்ததால் பிறந்தாள் அன்னை ஈழம்
நீதிசெய்து உன் மகளுக்(கு) இந்தியாவே-நீ
நேயமுடன் முடி புனைவாய் இந்தியாவே

ஈழமுன்றன் சொந்த மகள் இந்தியாவே - உடன்
இளவரசுப் பட்டம் கட்டி இந்தியாவே
வாழவிடு தமிழினத்தை இந்தியாவே - வர
லாறு உன்னைப் போற்றி நிற்கும் இந்தியாவே

இந்து தர்மம் பேசுகிறாய் இந்தியாவே - உன்றன்
சொந்த தர்மம் ஏன் மறந்தாய் இந்தியாவே
விந்தையன்றோ இளவரசி ஈழமாதை - நீ
வேண்டுமென்றே புறக்கணித்தல் இந்தியாவே

உளவறிக்கை என்று சொல்லி இந்தியாவே - நீ
உளறல்களைப் பெறுவதென்னே இந்தியாவே
விளைவுனக்குத் தீமையன்றி
இந்தியாவே - இதனால்
வேறு என்ன கிடைத்திடுமோ இந்தியாவே

'றோ" அறிஞர் மீது என்றும் இந்தியாவே - நீ
மோகமது கொண்டுவிட்டாய் இந்தியாவே
ஆறறிவு தானெவர்க்கும் இந்தியாவே - நீ
அடுத்தவரையும் மதிப்பாய் இந்தியாவே

முற்றான கொள்கையின்றி இந்தியாவே - தமிழர்
முதுகிற் குத்த எண்ணுகிறாய் இந்தியாவே
கற்றிடுவாய் பெரும்பாடம் இந்தியாவே-அதற்குக்
கனகாலம் செல்லாது இந்தியாவே

இந்து அடிப்படைவாதம் இந்தியாவே
இவ்வுலகில் வலியதென்றால் இந்தியாவே
செந்தமிழர் அடிப்படையும் இந்தியாவே
சிறந்து நிற்க வழிகளுண்டு இந்தியாவே

புறக்கணித்துத் தமிழுணர்வை இந்தியாவே - நீ
போகவிட்டால் நெடுங்காலம் இந்தியாவே
மறக்க முடியாப்பாடம் இந்தியாவே-சொந்த
மண்ணிலேயே நீ படிப்பாய் இந்தியாவே

சுதந்திரப் பொன்விழாவதனை
இந்தியாவே - ஐயோ!...
சொல்ல வெட்கமாகிறதே இந்தியாவே
விதந்துயர்த்த இங்கிலாந்தின் ராணியாரை - விட
வேறொருவர் கிடைக்கலையோ இந்தியாவே

அடிமைகொண்டு ஆண்டவனை மீண்டும்
போற்றி - உன்றன்
அற்பபுத்தி காட்டிநின்றாய் இந்தியாவே
கொடுமையிலுங் கொடுமையன்றோ
இந்தியாவே - உன்றன்
குடியுரிமைக் கிந்தநிலை இந்தியாவே

'சவறினிற்றி' என்று சொல்லி
சிங்களத்தின் - கையில்
தமிழினத்தை நீ கொடுத்தால் இந்தியாவே
பவறுனக்குச் சுப்பறின்றி இந்தியாவே - வெறும்
பகற்கனவாய் மாறிவிடும் இந்தியாவே

மத்தியிலாதிக்கம் வைத்து இந்தியாவே - ஈழ
மக்கள்தனை விற்றிடவே இந்தியாவே
சித்தமென்றால் செய்து விடு இந்தியாவே - பின்னர்
செய்தபிழை நீயறிவாய் இந்தியாவே

மொழியுணர்வை அழிப்பதற்கு
இந்தியாவே - உன்றன்
முப்பாட்டன் வந்தாலும் இந்தியாவே
முடியுமென்று எண்ணினையோ இந்தியாவே - அது
மூடமதி நீயறிவாய் இந்தியாவே

கம்யுனிசம் பார்ப்பனியம் ரெண்டும்
சேர்ந்தே - இன்று
கலந்து நின்று தமிழிசத்தில் சேறுவாரி
வம்பு பண்ண நினைப்பதனால்
இந்தியாவே - என்றும்
வரும் பலனிங்கேதுமில்லை இந்தியாவே

வேற்றுமையில் ஐக்கியம்தான் இந்தியாவே - இனி
வேண்டுமென்றும் மிலெனியத்தில் இந்தியாவே
சாற்றி நின்றேன் மறைமுகமாய் இந்தியாவே - சில
சங்கதிகள் நீயறிவாய் இந்தியாவே

□

(நாதர்முடி மேலிருக்கும்... என்ற மெட்டு)
நம்நாடு ஜுலை14 2000

# கலைஞர் கருணாநிதிக்கு...

மூத்த தலைவா! முதற்கண் வணக்கங்கள்
ஆர்த்தெழுந்து வீரம் அறத்தை நிலைநாட்டி
போர்த்திறன்கள் காட்டி புவியில் தமிழரினம்
ஆர்க்கும் அடிமையென ஆகாது என்றெழுந்து
பண்டைப் புறவாழ்வின் பான்மைக்கு நேரான
பண்பை உயிர்ப்பித்த பைந்தமிழ் ஈழத்தாய்
பெற்றெடுத்த ஓர் மகன் யான் பெருமை மிகு நீயெம்
சுற்றத்தான் என்ற துணிவில் எழுதுகிறேன்

அண்ணா! தமிழுக்கணிகலனே உன்றனது
கண்ணால் நீ எங்கள் கடுந்துயரைக் காணாயோ?
எண்ணை திரண்டு வருநேரம் தாழிதனைத்
தூக்கியுடைக்கும் துரோகத்தினைச் செய்யப்
பக்கத்து வீடான பாரதத்தை இன்று சில
நக்கற் பொறுக்கிகளோ நயமாயழைக்கின்றார்
இந்தவுலகிற் தமிழனுக்கென்றோர் நாடு
சொந்தமென ஆகும் நாள் தூரத்தில் இல்லையதால்

பாரதத் தாயைப் பழிகாரர் கூப்பிட்டு
ஆதரவு அற்ற எமை அழித்துவிடத் தூண்டுகிறார்
அண்ணா எமக்குனது ஆதரவு இல்லையெனில்
என்ன விளைவு வரும் என்பதனை நீயறிவாய்
தங்களுக்கே நாடு தமிழன் கள்ளத்தோணி
சிங்களமே ஆட்சிமொழி சித்தார்த்த மாமுனிவன்
சொல்லா அதர்மமெல்லாம் சொந்தம் தமக்கென்றே
இங்கே எமக்கிவர்கள் இடர்செய்யும் பாங்கதனை

அண்ணா அறிவாயுன் ஆதரவைக் கேட்கின்றோம்
வென்று களத்தில் விரைவாய்த் தமிழ் ஈழம்
என்றலரும் என்றே எதிர்பார்க்கும் காலமிது
உன்றனது வாயால் உரைக்கின்ற ஓர் வார்த்தை
கன்றினுக்குத் தாய் கனிந்து கொடுக்கும் பால்
சாதல் வரும் மூப்பைத் தவிர்த்து விடலாகாது
ஆதலினால் அண்ணா ஆதரவு செய்வதெனில்
போதலுக்கு முன்னே புரி

□

# IN 1983...

A twin-poem in translation by
Prof. **Kopan Mahadeva,** Ph.D, Hon. D.Litt

( Origin: **எண்பத்து மூன்றினிலே... by S. Karunanandarajah** )

*In Nineteen Eighty Three*
*Waves of woes went wild and free*
*In Lankan Isle of the Indian sea.*

***(In 1983...)***

It was on the third day of the fourth week of the seventh month of 1983

That political thunder and plunder began again in that placid Isle,

In the shape of race-based terror against its Tamil-speaking people.

The world watched in silence; Only very few even expressed grief. ***(In 1983...)***

As if evil eyes had been cast on the capable and industrious Tamilrace,

Their folks were overtly hurt in every thinkable way, day by day by day.

Masses of Hindus were massacred, made homeless almost overnight.

Thousands, when they seemed like Tamils, were tortured, simply killed. ***(In 1983...)***

Can anyone forget the true and tragic tales of poor and helpless females

With babes-in-arms and brutally battered hearts driven to drink poison

When raped by rioting thugs; and of their babes, innocently ignorant

Of their mothers' fates, also embracing death during next breast-feeds. *(In 1983...)*

Will it ever depart our hearts that in the tea gardens of South Lanka,

Thousands of Tamil brothers and sisters were killed by racialists,

Rioters, even while they survived in inhuman states and worked hard

For the State, treated like dogs and spat at, having been made stateless. *(In 1983...)*

Memories of how the Government's armed forces stripped and shamed

Our mothers and sisters, and burnt all possessions, making us penniless,

And sights of those disgraceful dastards carving out the eyes of the dead,

In crude amusement, regularly return in waves and scorch our souls. *(In 1983...)*

To whom on earth can we appeal on the unfair, unjust deals to our dear

Mother Tamil by the major Sinhala Buddhists? Do we have any other

Abode than our Tamil Eelam? Young Brothers, Sisters, do daily study

Our history. Swell in power to change our Refugees-with-no-State plight. ***(In 1983...)***

Though we somehow survive in relative comfort and wealth in the West now,

Can we ever forget our country of birth? O, Fair wind, you do travel round

The world. Please carry these, our tidings eastwards, to our Tamil Eelam:

That we long to return to Mother's home. We can no longer sob and cry! ***(In 1983...)***

We don't much use our Mother's tongue now. We have lost innate skills.

We've joined the world's whirlwind and cast our ancient arts and culture.

Do we change identity too, become someone else? Or do we remain as Tamils,

Keeping Tamil stateliness? Please tell us Mother, Goddess Kaarli! Please do!!

*In Nineteen Eighty Three*
*Waves of woes went wild and free*
*In Lankan Isle of the Indian sea.*

□ ***(In 1983...)***

# ON THE JAFFNA LIBRARY ARSON : 1981

A twin-poem in translation by

**Prof. Kopan Mahadeva,** Ph.D, Hon. D.Litt.,

(Origin: யாழ் நூலக எரிப்பு by **S. Karunanandarajah**)
writing as புகசாரதி for the Deepam Television, London

Why did they plot this despicable act? The schemers, did they prefer to sever
Their noses and appear before us as ill-omen to dampen our path to progress?
Why did the dastards commit this cowardly crime? What profits have the fools
Reaped, and what gain has anyone made by burning this, our ancestral wealth?

What ills did all those ancient books in English, some in certain Aryan tongues,
Most in our own sweet Tamil, and some even in Sinhalese, with their age-old,
Accumulated wisdom, which were of practical use in noble and friendly ways,
What harm did these works do to them to be set on fire and burnt all together?

Did they think they were setting a trap to slow the flow of the learning streams
In the domains of Goddess Tamil? Didn't they pound just empty mortars of wood?
Why did these mean folks attempt to beat the bright sun with part-burnt firewood?
Did they try to demolish our culture and us, by damaging this, our nation's gem?

Why did these halfwits empty their trash-bins of hate into the pure, refined pool
Of wisdom, to block the flood and flow of enlightening knowledge and truth?
Having failed to coax out dust which shut their sights, with gentle wash-and-wipe,
These dolts decided to pierce their eyes with pins, thus forever becoming blind.

History is laughing at these misguided miscreants who, with their very hands
Have filled their eyes with grimy sand. Humanism is frowning at and lamenting

The survival yet, in its midst, of these ill-bred specimens who mar its grandeur.
Good Earth stares helpless at these twits who've smudged her face with excrement.

The whole world is laughing in derision at these laze-driven louts who have
Their lowliness of passion broadcast with tom-toms, pretty well by their own acts.
The entire world is sobbing with shyness at the foolishness of these fanatics
Who had really cut off their noses to treat themselves against common cold.

What use laughing at them now? What use crying day-and-night at our plight,
Now that our Goddesses of Learning and Wealth are all but dead? How many
Senses do these two-legged fire-ants that ate our much prized books possess?
Who, did these dog-brained persons think, will gain from their damaging act?

Why did these mean men strive so hard to maim for good this world's wisdom?
Like spitting in the huge wide sea to make it mean, like trying to mask the sweet

Fragrance of the Arabian Jasmine by throwing at it smelly sediments from drains,
Like trying to block out the moon with their bare hands, did these evil men try

To disgrace golden Mother Tamil, world's ancient and elegant lamp of learning?
Who has really lost by their sub-human action of garlanding the most holy statue
Of our temple with prickly thorns? Is it only ancestral Tamil Eelam where we're
Rooted deep, that lost? Is it just the Tamil language which has lost? No, not so!

But the world itself has lost by the arson committed on our Jaffna's Library.
All those learned, in the world, have lost thereby. That's why the whole world
Is thinking, with fingers on noses, how this slinging of mud could occur,
How such base-passions sprout, how such enmities are born between men!

Who are these offenders? Which dense jungles' hyenas and jackals are they?
Why did they think of such despicable acts? Never in the history of this world

Had anyone performed such a horrible crime; never before have human beings
Suffered such losses to their glorious civilizations. Nowhere in world's annals!

Even Hitler who authored atrocities, being soaked up in his fascist doctrines,
Never gave any such orders to his henchmen or troops. Even while allowing
The bombing of London in WW-2, he instructed them to spare the Museums.
Why? Because he knew that therein lay the seeds of knowledge and wisdom.

Are these men mere fools? Or, are they rice-guzzling hollow balloon-bags,
To destroy our precious Library, popular as the best in all of South Asia then,
Without the brains to discern Lord Siva's Lingam stone from simple gneiss,
And to have lifted one leg and urinated without finding out on what or where?

Even when we choose to forget all these, our minds are not fully cooerating!
We find it hard to decide on the most fitting words from world's dictionaries
To describe their shameful and cowardly act, in having sacrificed our abode
Of learning to some devil they worship. Even long after we are dead and burnt,

The souls of Tamils who love their language and heritage will sob loud and curse
Those culprits. Having done what they did, those hypocrites soaked in falsehood,
Having wounded the heart of our Goddess of Learning seated on her white lotus

With tears of fire triggered by their act, they are applying puny drops of perfume

To her bleeding heart. Those who unhesitatingly destroyed our Tamil treasure
Are now pretending to form a movement to rebuild this monument. Will they
Do anything concrete? That mean clan which showed no regard for our centre
Of learning is pretending to collect bricks and books for building it back for us.

They are lifting their garments to their faces to shield their shame, and the world
Is laughing at their folly. Even if we use our skills-with-words and vilify them
As we now do, even if we become storm and defeat these ignoramuses in warfare,
Still we should not forget that donkeys never learn of the fragrance of perfumes.

They do not respect education. Books are just paper for donkeys to bite and eat,

And they regurgitate knowledge only as eaten paper, and then they loudly bray.

Therefore, dear kinsmen, let us remove the pain inflicted by those whose nature

Is to do evil, and throw that pain far away. As an antidote for their poisoned act,

Let us dedicate ourselves to diligent learning and research, and rebuild our nation.

Let us collect rare and useful books from everywhere, in thousands, in each home

And keep them for our country being freed. Let us take cunning cues from trees

And blooms like bamboo, lilies and Lotus which start re-sprouting and flowering

As soon as water returns, even after months, in dried and cracked up clayey soils.

We will rise again very soon from our ashes, like the phoenix. Of that we're sure!

□

# FREEDOM LEAP

A poem in translation by
**Prof. Kopan Mahadeva. Ph.D, Hon. D.litt.,**

(Origin: சுதந்திரத் துள்ளு by **S. Karunanandarajah**
writing as யுகசாரதி in Newspaper நம்நாடு, ஜூலை 27 2000)

Come, let's leap-dance and loudly sing in glee
That we've passed Elephant Pass successfully.
(Come, let's…)

Freedom is our feedback from everywhere
And so we feel sure Tamil Eelam is near.
Let's blow our conches and commemorate
And with our Mother Tamil concelebrate.
(Come, let's…)

Brahminism teasing us is now long past;
Our dependence on Bharat, now behind.
Begging from cheaters is now long past;
Tamil Eelam will be ours, you will soon find.
(Come, let's…)

All traitors, soaked in fear, are trembling.
Our eyelike fighters, at war, are winning.
Invading aliens, entrenched in the north
Are clueless as to where to hide henceforth.
(Come, let's...)

Tamil prowess now rules over the land and sky;
Tamils' power has spread to Bengal's seas high.
Even our orthodox parents extol the bravery
Of girls once thought born only for cookery.
(Come, let's...)

Goddess Parasakthy will doubtless assist us.
To recapture our country she will bless us.
To restore Tamil glory she'll grant us graces,
And to access her assistance she will coach us.
(Come, let's...)

□

## ஆசிரியர் பற்றி...

எஸ். கருணானந்தராஜா 1951 இல் இலங்கையில் களுவாஞ்சிகுடி கிராமத்தில் பிறந்தவர். கிராமத்திலும், மட்டக்களப்பிலும், யாழ். கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் ஆரம்பக்கல்வியையும், இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வியையும், தாய்லாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளில் பட்டமேற்படிப்பு, பயிற்சிநெறிகளையும் பெற்ற இவர் இளமையிலிருந்தே கவிதையிலும் இலக்கியத்திலும் ஆர்வங்கொண்டு பல பரிசுகளும் பெற்றவர். கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடாத்திய உடன் கவிதையாக்கற் போட்டியிற் பரிசு, 1986 வீரகேசரி எழுத்தாளராண்டு அகில இலங்கைக்கான சிறுகதைப்போட்டியில் முதற்பரிசு உட்பட, பிரதேச ரீதியிலும் இலக்கியத்தில் பல பரிசுகளை இளமைக் காலங்களிற் பெற்ற இவர், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க இதழான இளங்கதிர் ஆசிரியராக 1976-77 களிலும், கொழும்புத் தமிழ் சங்க நிர்வாக சபை உறுப்பினராக 1990-94களிலும் பணிபுரிந்திருக்கிறார். தற்போது லண்டனில் வசிக்கும் இவர் தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு (Tamil Refugee Action Group-TRAG) என்னும் நிறுவனத்தின் இணைப்பாளராகப் பணி புரிகிறார்.

'பாரதியின் குயில்பாட்டின் தத்துவமர்மம்' என்னும் இவரது ஆய்வு நூலே இவரது முதற் தமிழ் இலக்கிய நூல். இது ஆய்வுக்கட்டுரையாக 1986 இல் கோலாலம்பூரில் நடந்த 6வது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சமர்ப்பிக்க ஏற்றுக்கொள்ளப்பட்டு நிகழ்ச்சி நிரலிலும் இடம்பெற்றது.ஆனால் ஆசிரியரால் மாநாட்டிற்கலந்து கட்டுரையை வாசித்தளிக்க முடியவில்லை.

பாரதியின் குயில்பாட்டு பல தசாப்தங்களாக வெறும் வேதாந்த ரீதியில் மட்டுமே வெகுசில ஆய்வாளர்களால் அணுகப்பட்டு கடவுளை

முன்னிறுத்தி விளக்கமளிக்கப்பட்டது. ஆசிரியர் அதனுள் ஆழமாகச் சென்று அது பாரதியின் வாழ்க்கையின் சில பின்னணி நிகழ்ச்சிகளைச் சூசகமாக வேதாந்தத்தினூடே வெளிப்படுத்தும் ஓர் கதை என்பதை நிறுவி, அக்கதையின் பாத்திரப்படைப்புகள் யாரை எவற்றைக் குறிப்பன என்பதையும் தெளிவாக விளக்கியுள்ளதோடு சொல்லுக்குச் சொல்விளக்கங்கள் அளித்து அந்நூல் தொடர்பாக இதுவரை இருந்துவந்த மயக்கநிலையையும் முற்றாக நீக்கி உள்ளார்.

பாங்கொக் கசற்சாட் பல்கலைக்கழக கம்பென்சான் வளாகத்திலியங்கும் கிளைநிலையமொன்றினால் இவரது ஆங்கிலத்திலான ஆய்வு நூல் (ஐஎஸ்பிஎன்974-552-884-6) 1989 இல் வெளியிடப்பட்டது.

ISBN

'ஈழத்தாய் சபதம்' என்னும் பாரதியின் பாஞ்சாலி சபதத்தின் சந்த நடையில் பாடப்பட்ட சுருக்கமான இந்த ஈழசரித்திரம் கனடா உதயன் இதழிலும் இலங்கை 'தமிழுலை' பத்திரிகையிலும் சமகாலத்தில் தொடராய் வெளிவந்துள்ளது. தற்போது 'ஒரு பேப்பர்' என்னும் லண்டனில் இருந்து வெளியாகும் மாதமிருமுறை வெளிவரும் பத்திரிகை இதனைத் தொடராக மீள் பிரசுரம் செய்கின்றது. இந்நூலின் இசைத்தட்டும், 'வள்ளுவன் காதல்' என்னும் பெயரில் ஆசிரியரின் ஏனைய சில ஆக்கங்களும் தொகுப்பாகப் (ISBN 1-873265-47-6) சமகாலத்தில் வெளியிடப்படுகின்றது.

□□□

**ஆசிரியரின் பிற நூல்கள் :**

1. பாரதியின் குயில் பாட்டின் தத்துவமர்மம்
2. வள்ளுவன் காதல் ISBN1-873265-47-6
2. ஈழத்தாய் சபதம் இசைத்தட்டு
3. Comprison of Kamphensan(Thailand) Home Garden Pattern with Nuwaraeliya(Sri Lankan) Pattern -AVRDC Publication-ISBN976-552-884-6

●●●

இலக்கியர் கருணானந்தராஜாவைப் பற்றி அவர்படைத்துள்ள ஈழத்தாய் சபதம் நெடும்பாவில் இரண்டு செய்திகளைத் தெரிந்து கொள்கிறோம்.

தமிழீழ மண்ணை உயிராக நேசிப்பவர். பாரதியோடு முழுமையாக ஒன்றியவர்.

பாவின் பொருள் தமிழீழம் / பாவின் நடை பாரதி.

தமிழீழ மண்ணின் நெடிய வரலாற்றைக் கருணானந்த ராஜா தமிழ் கொண்டு பதிவு செய்கிறார்.

வரலாற்றைப்'பா' ஆக்குவது எளிதானதல்ல. உணர்ச்சி பொங்க எழுதப்படாவிட்டால் அது இலக்கியமாக வராது வடிவம் பெறாது.


கருணானந்த ராஜாவின் ஆற்றலில் தமிழீழ வரலாறு இலக்கியமாய்க் கனிந்திருக்கிறது.

காலம் காலமாய் போராடியே வாழ்ந்த ஒரு மண்ணின் வரலாற்றுக் காட்சிகள்.

தமிழுக்கு உயிரூட்டும், தமிழினத்துக்கு உணர்வூட்டும் தமிழீழ மண்ணுக்கு உரமூட்டும் தமிழ்.

கருணானந்தராஜாவின் தமிழ் தொடர்ந்து நெருப்பாய்க் கனிக.

கவிஞர் காசி ஆனந்தன்



ISBN : 1-873265-42-5